திருமணம்

செல்வக் கேசவராய முதலியார், எம். ஏ.

1864 - 1921

பேராசிரியர்

திருமணம் செல்வக் கேசவராய முதலியார்

பயன்படுத்திய இந்நூல்

அவர்கள்தம் பேரன் திருவாளர்

தி நம்பிராசன் அவர்களால்

மறைமலையடிகள் நூல்நிலையத்திற்கு

அன்பளிப்பாக

வழங்கப்பெற்றது.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸந்நிதிகளிலும் விசேஷமான திருநட்சத்திரங்களிலும்
திருமாளிகையில் நித்தியப்படி
திருவாராதனைசெய்யுங்காலங்களிலும்
திருவத்தியயனகாலங்களிலும்
உபயோகப்பட்டுவாநின்ற

நித்தியானுஸந்தான திவ்வியப் பிரபந்தம்.

இஃது,

பாகவதோத்தமர்கள்

அச்சிட்டுத்தருகவெனக்கேட்டுக்கொண்டதால்
காலக்ஷேபபரான் அத்தியாபகரான்
இவர்கள்முன்னிலையில்,

—******—

நேத்திரப்பாக்கம்.

சின்னயரவர்களால்

முன்பதிப்பித்தபிரதிக்கிணங்கப்
பரிசோதித்து

—

கல்விச்[illegible]முத்திரவச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது,

—*****—

ரௌத்ரி௵ கார்த்திகை ௴

—*******—

இதில் - கோயிற்றிருவாய்மொழியும்,
இராமாநுஜநூற்றந்தாதியும் - அடங்கியிருக்கின்றன.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

இந்தப்பிரபந்தத்தைநித்தியப்படி பக்தியுடன்
ஆசரித்ததிகரிப்பவர்கள் ஸ்ரீமந்நாராயண
னுடையகடாக்ஷத்தினால் ஸமஸ்தபாக்
கியங்களையுமடைந்துபல்லாண்டு
பல்லாண்டுவாழ்வார்கள்
இப்பிரபந்தத்தை அதிகரித்தால
நாலாயிரப் பிரபந்தங்களை
ஒருமிக்க அதிகரித்தது
போலாம்.

இப்போது.

திருவாய்மொழிநூற்றந்தாதியும் - உபதேசரத்ந
மாலையும் - வாழித்திருநாமமும் - பதிக்கப்பட்டுவருகின்றன.

ஜீயர்திருவடிகளேசரணம்.

—— * ——

ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம்...... *
தீபக்த்யாதிகுணார்ணவம்...... *
யதீந்த்ரப்ரவணம்வந்தே...... *
ரம்யஜாமாதரம்முநிம்...... *

லக்ஷ்மீநாதஸமாரம்பாம்...... *
நாதயாமுநமத்யமாம்...... *
அஸ்மதாசார்யபர்யந்தாம்...... *
வந்தேகுருபரம்பராம்...... *

யோநித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம...... *
வ்யாமோஹதஸ்ததிதராணித்ருணாயமேநே...... *
அஸ்மத்குரோர்பகவதோஸ்யதயைகஸிந்தோ...... *
ராமாநுஜஸ்யசரணௌஶரணம்ப்ரபத்யே...... *

மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதி...... *
ஸர்வம்யதேவநியமேநமதந்வயாநாம்...... *
ஆத்யஸ்யந: குலபதேர்வகுளாபிராமம்...... *
ஸ்ரீ[illegible]யுகளம்ப்ரணமாமிமூர்த்நா...... *

பூதம்ஸரச்சமஹதாஹ்வயபட்டநாத...... *
ஸ்ரீபக்திஸாரகுலசேகரயோகிவாஹாந்...... *
பக்தாங்க்ரிரேணுபரகாலயதீந்த்ரமிஶ்ராந்...... *
ஸ்ரீமத்பராங்குசமுனிம்ப்ரணதோஸ்மிநித்யம்...... *

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

நித்தியாநுஸந்தானம்.

———***———

தனியன்.

குருமுகமநதீத்யப்ராஹவேதாநசேஷாந் *
நரபதிபரிக்லிப்தமசுல்கமாதாதுகாம: *
சுவசுரமமரவந்த்யம்ரங்கநாதஸ்யஸாக்ஷாத் *
த்விஜகுலதிலகந்தம்விஷ்ணுசித்தம்நமாமி *

(நேரிசைவெண்பா,)

மின்னார்தடமதிள்சூழ்வில்லிபுத்தூரென்றொருகால் *
சொன்னார்கழற்கமலஞ்சூடினோம் - முன்னாள் *
கிழியறுத்தானென்றுரைத்தோம்கீழ்மையினிற்சேரும் *
வழியறுத்தோநெஞ்சமேவந்து *
பாண்டியன்கொண்டாடப்பட்டர்பிரான்வந்தானென் *
றீண்டியசங்கமெடுத்தூத - வேண்டிய *
வேதங்களோதிவிரைந்துகிழியறுத்தான் *
பாதங்கள்யாமுடையபற்று *

பெரியாழ்வார் - திருவடிகளே - சரணம்,

—******—

பெரியாழ்வார்திருவாய்மலர்ந்தருளிய

பாகவதஸாரமாகியதிருமொழி,

—********

திருப்பல்லாண்டு.

காப்பு,

(வெண்செந்துறை,)

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு *
பல்கோடி நூறாயிரம் *
மல்லாண்டதிண்டோள்மணிவண்ணாவுன் *
சேவடிசெவ்வி திருக்காப்பு *

(அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்)

அடியோமோடுநின்னோடும்பிரிவின்றியாயிரம்பல்லாண்டு *
வடிவாய்நின்வலமார்பினில்வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு *
வடிவார்சோதிவலத்துறையுஞ்சுடராழியும்பல்லாண்டு *
படைபோர்புக்குமுழங்குமப்பாஞ்சசன்னியமும்பல்லாண்டே (௧)

வாழாட்பட்டுநின்றீருள்ளீரேல்வந்துமண்ணுமணமுங்கொண்மின் ...... *
கூழாட்பட்டுநின்றீர்களையெங்கள்குழுவினிற்புகுதலொட்டோம் ...... *
ஏழாட்காலம்பழிப்பிலோநாங்களிராக்கதர்வாழிலங்கை ...... *
பாழாளாகப்படைபொருதானுக்குப்பல்லாண்டுகூறுதுமே ...... (௨)
ஏடுநிலத்திலிடுவதன்முன்னம்வந்தெங்கள்குழாம்புகுந்து ...... *
கூடுமனமுடையீர்கள்வரம்பொழிவந்தொல்லைக்கூடுமினோ ...... *
நாடுநகரமுநன்கறியநமோநாராயணாயவென்று ...... *
பாடுமனமுடைப்பத்தருள்ளீர்வந்துபல்லாண்டுகூறுமினே ...... (௩)
அண்டக்குலத்துக்கதிபதியாகியசுரரிராக்கதரை ...... *
இண்டைக்குலத்தையெடுத்துக்களைந்தவிருடீகேசன்றனக்கு ...... *
தொண்டைக்குலத்திலுள்ளீர்வந்தடிதொழுதாயிரநாமஞ்சொல்லிப் ...... *
பண்டைக்குலத்தைத்தவிர்ந்துபல்லாண்டுபல்லாயிரத்தாண்டென்மினே ()
எந்தைதந்தைதந்தைதந்தைதம்மூத்தப்பனேழ்படிகால்தொடங்கி ...... *
வந்துவழிவழியாட்செய்கின்றோந்திருவோணத்திருவிழவில் ...... *
அந்தியம்போதிலரியுருவாகியரியையழித்தவனை ...... *
பந்தனைதீரப்பல்லாண்டுபல்லாயிரத்தாண்டென்றுபாடுதுமே ...... (௫)
தீயிற்பொலிகின்றசெஞ்சுடராழிதிகழ்திருச்சக்கரத்தின் ...... *
கோயிற்பொறியாலேயொற்றுண்டுநின்றுகுடிகுடியாட்செய்கின்றோம் *
மாயப்பொருபடைவாணனையாயிரந்தோளும்பொழிகுருதி ...... *
பாயச்சுழற்றியவாழிவல்லானுக்குப்பல்லாண்டுகூறுதுமே ...... (௬)
நெய்யிடைநல்லதோர்சோறுநியதமுமத்தாணிச்சேவகமும் ...... *
கையடைக்காயுங்கழுத்துக்குப்பூணொடுகாதுக்குக்குண்டலமும் ...... *
மெய்யிடைநல்லதோர்சாந்தமுந்தந்தென்னைவெள்ளுயிராக்கவல்ல ...... *
பையுடைநாகப்பகைக்கொடியானுக்குப்பல்லாண்டுகூறுவனே ...... (௭)
உடுத்துக்களைந்தநின்பீதகவாடையுடுத்துக்கலத்ததுண்டு ...... *
தொடுத்ததுழாய்மலர்சூடிக்களைந்தனசூடுமித்தொண்டர்களோம் ...... *
விடுத்ததிசைக்கருமந்திருத்தித்திருவோணத்திருவிழவில் ...... *
படுத்தபைந்நாகணைப்பள்ளிகொண்டானுக்குப்பல்லாண்டுகூறுதுமே (௮)
எந்நாளெம்பெருமானுன்றனக்கடியோமென்றெழுத்துப்பட்ட ...... *
அந்நாளேயடியோங்களடிக்குடில்வீடுபெற்றுய்ந்ததுகாண் ...... *
செந்நாடோற்றித்திருமதுரையுட்சிலைகுனித்தைந்தலையப் ...... *
பைந்நாகத்தலைப்பாய்ந்தவனேயுன்னைப்பல்லாண்டுகூறுதுமே ...... (௯)
அல்வழக்கொன்றுமில்லாவணிகோட்டியர்கோனபிமானதுங்கன் ...... *
செல்வனைப்போலத்திருமாலேநானுமுனக்குப்பழவடியேன் ...... *

நல்வகையால்நமோநாராயணாவென்றுநாமம்பலபரவிப்.................*
பல்வகையாலும்பவித்திரனேயுன்னைப்பல்லாண்டுகூறுவனே... .....(௰)
பல்லாண்டென்றும்பவித்திரனைப்பரமேட்டியைச்சார்ங்கமென்னும் ...*
வில்லாண்டான்றன்னைவில்லிபுத்தூர்விட்டுசித்தன்விரும்பியசொல்..*
நல்லாண்டென்றுநவின்றுரைப்பார்நமோநாராயணாயவென்று...... ...*
பல்லாண்டும்பரமாத்மனைச்சூழ்ந்திருந்தேத்துவர்பல்லாண்டே......(௰௧)

பெரியாழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

தொண்டரடிப்பொடியாழ்வார்.

திருவாய்மலர்ந்தருளிய வேதார்த்தஸாரமாகிய

திருப்பள்ளியெழுச்சி.

இருவிகற்பநேரிசைவெண்பா-தனியன்.

மண்டங்குடியென்பர்மாமறையோர்மன்னியசீர்த்.........*
தொண்டரடிப்பொடிதொன்னகரம்-வண்டு.................*
திணர்த்தவயற்றென்னரங்கத்தம்மானைப்பள்ளி..............*
உணர்த்தும்பிரானுதித்தவூர்..............................*

(எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்)

கதிரவன்குணதிசைச்சிகரம்வந்தணைந்தான்... ... ...*
கனையிருளகன்றதுகாலையம்பொழுதாய்... ... ... *
மதுவிரிந்தொழுகினமாமலரெல்லாம் ... ... *
வானவரரசர்கள்வந்துவந்தீண்டி... ... ... *
எதிர்திசைநிறைந்தனரிவரொடும்புகுந்த... ... ... *
இருங்களிற்றீட்டமும்பிடியொடுமுரசும் ... ... *
அதிர்தலிலலைகடல்போன்றுளதெங்கும்... ... ... *
அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே... ... ... (௧)
கொழுங்கொடிமுல்லையின்கொழுமலரணவிக்... ... ... *
கூர்ந்ததுகுணதிசைமாருதமிதுவோ... ... ... *
எழுந்தனமலரணைப்பள்ளிகொள்ளன்னம்... ... ... *
ஈர்ம்பனிநனைந்ததமிருஞ்சிறகுதறி... ... ... *
விழுங்கியமுதலையின்பிலம்புரைபேழ்வாய்... ... ... *
வெள்ளெயிறுறவதன்விடத்தினுக்கனுங்கி ... ... *

அழுங்கியவானையினருந்துயர்கெடுத்த... ... ... *
அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே... ... ...(௨)

சுடரொளிபரந்தனசூழ்திசையெலாந்... ... ...*
துன்னியதாரகைமின்னொளிசுருங்கிப்... ... ... *
படரொளிபசுத்தனன்பனிமதியிவனோ ... ... *
பாயிருளகன்றதுபைம்பொழிற்கமுகின் ... ... *
மடலிடைக்கீறிவண்பாளைகணாற... ... ... *
வைகறைகூர்ந்ததுமாருதமிதுவோ... ... ... *
அடலொளிதிகழ்தருதிகிரியந்தடக்கை ... ...*
அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே ... ... (௩)

மேட்டிளமேதிகடளைவிடுமாயர்கள்... ... ...*
வேய்ங்குழலோசையும்விடைமணிக்குரலும்... ... ... *
ஈட்டியவிசைதிசைபரந்தனவயலுள் ... ...*
இருந்தனசுரும்பினமிலங்கையர்குலத்தை... ... ... *
வாட்டியவரிசிலைவானவரேறே ... ... *
மாமுனிவேள்வியுங்காத்தவவிரதம்... ... ... *
ஆட்டியவடுதிறலயோத்தியெம்மரசே... ... ... *
அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே ... ... (௪)

புலம்பினபுட்களும்பூம்பொழில்களின்வாய் ... ...*
போயிற்றுக்கங்குல்புகுந்ததுபுலரி... ... ... *
கலந்ததுகுணதிசைக்கனைகடலரவம் ... ... *
களிவண்டுமிழற்றியகலம்பகம்புனைந்த... ... ... *
அலங்கலந்தொடையல்கொண்டடியிணைபணிவான்... ... ... *
அமரர்கள்புகுந்தனராதலிலம்மா... ... ... *
இலங்கையர்கோன்வழிபாடுசெய்கோயில்... ... ... *
எம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே ... ... (௫)

இரவியர்மணிநெடுந்தேரொடுமிவரோ ... ... *
இறையவர்பதினொருவிடையருமிவரோ ... ...
மருவியமயிலினனறுமுகனிவனோ ... ...
மருத்தரும்வசுக்களும்வந்துவந்தீண்டிப் ... ... *
புரவியோடாடலும்பாடலுந்தேரும் ... ... *
குமரதண்டம்புகுந்தீண்டியவெள்ளம்... ... ... *
அருவரையனையநின்கோயின்முன்னிவரோ... ... ... *
அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே... ... ... (௬)

அந்தரத்தமரர்கள்கூட்டங்களிவையோ
அருந்தவமுனிவருமருதருமிவரோ...
இந்திரனானையுந்தானும்வந்திவனோ...
எம்பெருமானுன்கோயிலில்வாசல்
சுந்தரர்நெருக்கவித்தியாதரர்நூக்க...
இயக்கருமயங்கினர்திருவடிதொழுவான்...
அந்தரம்பாரிடமில்லைமற்றிதுவோ...
அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே (எ)

வம்பவிழ்வானவர்வாயுறைவழங்க...
மாநிதிகபிலையொண்கண்ணாடிமுதலா...
எம்பெருமான்படிமைக்கலங்காண்டற்...
கேற்பனவாயினகொண்டுநன்முனிவர்
தும்புருநாரதர்புகுந்தனரிவரோ...
தோன்றினனிரவியுந்துலங்கொளிபரப்பி...
அம்பரத்தலத்தினின்றகல்கின்றதிருள்போய்
அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே... (அ)

ஏதமிறண்ணுமையியத்தமத்தளியாழ்
யாழ்குழன்முழவமோடிசைதிசைகெழுமிக்
கீதங்கள்பாடினர்கின்னரர்கருடர்...
கந்தருவருமிவர்கங்குலுளெல்லாம்...
மாதவர்வானவர்சரணரியக்கர்...
சித்தருமயங்கினர்திருவடிதொழுவான்...
ஆதலிலவர்க்குநாளோலக்கமருள்வான்
அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே... (௯)

கடிமலர்க்கமலங்கண்மலர்ந்தனவிவையோ...
கதிரவன்கனைகடன்முளைத்தனனிவனோ...
துடியிடையார்சுரிகுழல்பிழிந்துதறித்...
துகிலுடுத்தேறினர்சூழ்புனலரங்கத்...
தொடையொத்ததுளபமுங்கூடையும்பொலிந்து...
தோன்றியதோட்டொண்டரடிப்பொடியென்னும்
அடியனையளியனென்றருளிநின்னடியார்க்...
காட்படுத்தாய்பள்ளியெழுந்தருளாயே...

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்,

திருப்பள்ளியெழுச்சி-முற்றிற்று.

ஸ்ரீமத்ராமாநுஜாயநம:

சூடிக்கொடுத்தநாச்சியார்

திருவாய்மலர்ந்தருளியஉபநிஷத்ஸாரமாகிய

திருப்பாவை.

நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்யக்ருஷ்ணம்... ... *
பாரார்த்யம்ஸ்வம்ஶ்ருதிசதசிரஸ்ஸித்தமத்யாபயந்தீ... ... *
ஸ்வோச்சிஷ்டாயாம்ஸ்ரஜிநிகளிதம்யாபலாத்க்ருத்யபுங்க்தே ... *
கோதாதஸ்யைநமஇதமிதம்பூயஏவாஸ்துபூய: ... ...*

நேரிசைவெண்பா-தனியன்.

அன்னவயல்புதுவையாண்டாளரங்கற்குப்... ... *
பன்னுதிருப்பாவைப்பல்பதிகம்-இன்னிசையாற்... ... *
பாடிக்கொடுத்தாணற்பாமாலைபூமாலை... ... *
சூடிக்கொடுத்தாளைச்சொல்... ... ... *
சூடிக்கொடுத்தசுடர்க்கொடியேதொல்பாவைப் ... *
பாடியருளவல்லபல்வளையாய்-நாடிநீ... ... ... *
வேங்கடவற்கென்னைவிதியென்றவிம்மாற்றம்... ... *
நாங்கடவாவண்ணமேநல்கு... ... ...*

(இயற்றரவிணைக்கொச்சகக்கலிப்பா)

மார்கழித்திங்கள்மதிநிறைந்தநன்னாளா... ... ... *
நீராடப்போதுவீர்போதுமினோநேரிழையீர் ... ... *
சீர்மல்குமாய்ப்பாடிச்செல்வச்சிறுமீர்காள்... ... ... *
கூர்வேற்கொடுந்தொழிலன்நந்தகோபன்குமரன்... ... ... *
ஏரார்ந்தகண்ணியசோதையிளஞ்சிங்கம்... ... ... *
கார்மேனிச்செங்கண்கதிர்மதியம்போல்முகத்தான்... ... *
நாராயணனேநமக்கேபறைதருவான்... ... ... *
பாரோர்புகழப்படிந்தேலோரெம்பாவாய்... ... ... (௧)

வையத்துவாழ்வீர்காணாமுநம்பாவைக்குச்... ... ... *
செய்யுங்கிரிசைகள்கேளீரோபாற்கடலுட்... ... ... *
பையத்துயின்றபரமனடிபாடி... ... ... *
நெய்யுண்ணோம்பாலுண்ணோநாட்காலேநீராடி... ... ... *
மையிட்டெழுதோமலரிட்டுநாமுடியோம்... ... ...*
செய்யாதனசெய்யோந்தீக்குறளைச்சென்றோதோம் ... ... *

ஐயமும்பிச்சையுமாந்தனையுங்கைகாட்டி... *
உய்யுமாறெண்ணியுகந்தேலோரெம்பாவாய்... (௨)

ஓங்கியுலகளந்தவுத்தமன்பேர்பாடி ... *
நாங்கணம்பாவைக்குச்சாற்றிநீராடினால்... *
தீங்கின்றிநாடெல்லாந்திங்கண்மும்மாரிபெய்... *
தோங்குபெருஞ்செந்நெலூடுகயலுகளப்... *
பூங்குவளைப்போதிற்பொறிவண்டுகண்படுப்பத்... *
தேங்காதேபுக்கிருந்துசீர்த்தமுலைபற்றி... *
வாங்கக்குடநிறைக்கும்வள்ளற்பெரும்பசுக்கள்... *
நீங்காதசெல்வநிறைந்தேலோரெம்பாவாய் ... (௩)

ஆழிமழைக்கண்ணாவொன்றுநீகைகரவேல் ... *
ஆழியுட்புக்குமுகந்துகொடார்த்தேறி ... *
ஊழிமுதல்வனுருவம்போன்மெய்கறுத்துப்... *
பாழியந்தோளுடைப்பத்மநாபன்கையில்... *
ஆழிபோன்மின்னிவலம்புரிபோனின்றதிர்ந்து... *
தாழாதேசார்ங்கமுதைத்தசரமழைபோல்... *
வாழவுலகினிற்பெய்திடாய்நாங்களும்... *
மார்கழிநீராடமகிழ்ந்தேலோரெம்பாவாய்... (௪)

மாயனைமன்னுவடமதுரைமைந்தனைத்... *
தூயபெருநீர்யமுனைத்துறைவனை ... *
ஆயர்குலத்தினிற்றோன்றுமணிவிளக்கைத் ... *
தாயைக்குடர்விளக்கஞ்செய்ததாமோதரனைத்... *
தூயோமாய்வந்துநாந்தூமலர்தூவித்தொழுது... *
வாயினாற்பாடிமனத்தினாற்சிந்திக்கப்... *
போயபிழையும்புகுதருவானின்றனவுந்... *
தீயினிற்றூசாகுஞ்செப்பேலோரெம்பாவாய்... (௫)

புள்ளுஞ்சிலம்பினகாண்புள்ளரையன்கோயிலில்... *
வெள்ளைவிளிசங்கின்பேரரவங்கேட்டிலையோ... *
பிள்ளாயெழுந்திராய்ப்பேய்முலைநஞ்சுண்டு... *
கள்ளச்சகடங்கலக்கழியக்காலோச்சி ... *
வெள்ளத்தரவிற்றுயிலமர்ந்தவித்தகனை... *
உள்ளத்துக்கொண்டுமுனிவர்களும்யோகிகளும்... *
மெள்ளவெழுந்தரியென்றபேரரவம் ... *
உள்ளம்புகுந்துகுளிர்ந்தேலோரெம்பாவாய் ... (௬)

கீசுகீசென்றெங்குமானைச்சாற்றங்கலந்து... ... ... *
பேசினபேச்சரவங்கேட்டிலையோபேய்ப்பெண்ணே ... ... *
காசும்பிறப்புங்கலகலப்பக்கைபேர்த்து... ... ... *
வாசநறுங்குழலாய்ச்சியர்மத்தினால்... ... ... *
ஓசைபடுத்ததயிரரவங்கேட்டிலையோ... ... ... *
நாயகப்பெண்பிள்ளாய்நாராயணன்மூர்த்தி... ... ... *
கேசவனைப்பாடவுநீகேட்டேகிடத்தியோ... ... ... *
தேசமுடையாய்திறவேலோரெம்பாவாய்... ... ... (௭)

கீழ்வானம்வெள்ளென்றெருமைசிறுவீடும் ... ... *
மேய்வான்பரந்தனகாண்மிக்குள்ளபிள்ளைகளும்... ... ... *
போவான்போகின்றாரைப்போகாமற்காத்துன்னைக்... ... ...*
கூவுவான்வந்துநின்றோங்கோதுகலமுடையப்... ... ... *
பாவாயெழுந்திராய்பாடிப்பறைகொண்டு... ... ... *
மாவாய்பிளந்தானைமல்லரைமாட்டிய... ... ... *
தேவாதிதேவனைச்சென்றுநாஞ்சேவித்தால்... ... ...*
ஆவாவென்றாராய்ந்தருளேலோரெம்பாவாய்... ... ... (௮)

தூமணிமாடத்துச்சுற்றும்விளக்கெரியத்... ... ... *
தூபங்கமழத்துயிலணைமேற்கண்வளரும் ... ... *
மாமான்மகளேமணிக்கதவந்தாடிறவாய்... ... ... *
மாமீரவளையெழுப்பீரோவுன்மகடான் ... ... *
ஊமையோவன்றிச்செவிடோவனந்தலோ ... ... *
ஏமப்பெருந்துயின்மந்திரப்பட்டாளோ ... ... *
மாமாயன்மாதவன்வைகுந்தனென்றென்றும் ... ... *
நாமம்பலவுநவின்றேலோரெம்பாவாய் ... ... (௯)

நோற்றுச்சுவர்க்கம்புகுகின்றவம்மனாய்... ... ... *
மாற்றமுந்தாராரோவாசறிறவாதார்... ... ...*
நாற்றத்துழாய்முடிநாராயணனம்மாற்... ... ... *
போற்றப்பறைதரும்புண்ணியனாற்பண்டொருநாள் ... ... *
கூற்றத்தின்வாய்வீழ்ந்தகும்பகருணனுந்... ... ... *
தோற்றுமுனக்கேபெருந்துயிறான்றந்தானோ... ... ... *
ஆற்றவனந்தலுடையாயருங்கலமே ... ... *
தேற்றமாய்வந்துதிறவேலோரெம்பாவாய்... ... ... (௰)

கற்றுக்கறவைக்கணங்கள்பலகறந்து ... ... *
செற்றார்திறலழியச்சென்றுசெருச்செய்யுங் ... ... *

குற்றமொன்றில்லாதகோவலர்தம்பொற்கொடியே... ... ... *
புற்றரவல்குற்புனமயிலேபோதராய்... ... ... *
சுற்றத்துத்தோழிமாரெல்லோரும்வந்துநின்... ... ... *
முற்றம்புகுந்துமுகில்வண்ணன்பேர்பாடச்... ... ...
சிற்றாதேபேசாதேசெல்வப்பெண்டாட்டிநீ ... ... *
எற்றுக்குறங்கும்பொருளேலோரெம்பாவாய்... ... ... (௰௧)

கனைத்திளங்கற்றெருமைகன்றுக்கிரங்கி... ... ... *
நினைத்துமுலைவழியேநின்றுபால்சோர ... ... *
நனைத்தில்லஞ்சேறாக்குநற்செல்வன்றங்காய் ... ... *
பனித்தலைவீழநின்வாசற்கடைபற்றிச்... ... ... *
சினத்தினாற்றென்னிலங்கைக்கோமானைச்செற்ற... ... ... *
மனத்துக்கினியானைப்பாடவுநீவாய்திறவாய்... ... ... *
இனித்தானெழுந்திராயீதென்னபேருறக்கம் ... ... *
அனைத்தில்லத்தாருமறிந்தேலோரெம்பாவாய்... ... .. (௰௨)

புள்ளின்வாய்கீண்டானைப்பொல்லாவரக்கனைக் ... ... *
கிள்ளிக்களைந்தானைக்கீர்த்திமைபாடிப்போய் ... ... *
பிள்ளைகளெல்லாரும்பாவைக்களம்புக்கார் ... ... *
வெள்ளியெழுந்துவியாழமுறங்கிற்று... ... ... *
புள்ளுஞ்சிலம்பினகாண்போதரிக்கண்ணினாய்... ... ... *
குள்ளக்குளிரக்குடைந்துநீராடாதே... ... ... *
பள்ளிக்கிடத்தியோபாவாய்நீநன்னாளால் ... ... *
கள்ளந்தவிர்ந்துகலந்தேலோரெம்பாவாய்... ... ... (௰௩)

உங்கள்புழைக்கடைத்தோட்டத்துவாவியுள்... ... ... *
செங்கழுநீர்வாய்நெகிழ்ந்தாம்பல்வாய்கூம்பினகாண் ... ... *
செங்கற்பொடிக்கூறைவெண்பற்றவத்தவர்... ... ... *
தங்கடிருக்கோயில்சங்கிடுவான்போதந்தார்... ... ... *
எங்களைமுன்னமெழுப்புவான்வாய்பேசும்... ... ... *
நங்காயெழுந்திராய்நாணாதாய்நாவுடையாய் ... ... *
சங்கொடுசக்கரமேந்துதடக்கையன் ... ... *
பங்கயக்கண்ணானைப்பாடேலோரெம்பாவாய் ... ... (௰௪)

எல்லேயிளங்கிளியேயின்னமுறங்குதியோ... ... ... *
சில்லென்றழையேன்மினங்கைமீர்போதருகின்றேன்... ... *
வல்லையுன்கட்டுரைகள்பண்டேயுன்வாயறிதும்... ... ... *
வல்லீர்கணீங்களேநானேதானாயிடுக... ... ... *

நல்லீர்போதாயுனக்கென்னவீறுடைமை ... *
எல்லாரும்போந்தாரோபோந்தார்போந்தெண்ணிக்கொள் ... *
வல்லானைக்கொன்றானைமாற்றாரைமாற்றழிக்க ... *
வல்லானைமாயனைப்பாடேலோரெம்பாவாய் ... (௰௫)

நாயகனாய்நின்றநந்தகோபனுடைய ... *
கோயில்காப்பானேகொடிதோன்றுந்தோரண ... *
வாயில்காப்பானேமணிக்கதவந்தாடிறவாய் ... *
ஆயர்சிறுமியரோமுக்கறைபறை ... *
மாயன்மணிவண்ணனென்னலேவாய்நேர்ந்தான் ... *
தூயோமாய்வந்தோந்துயிலெழப்பாடுவான் ... *
வாயான்முன்னமுன்னமாற்றாதேயம்மாநீ ... *
நேயநிலைக்கதவநீக்கேலோரெம்பாவாய் ... (௰௬)

அம்பரமேதண்ணீரேசோறேயறஞ்செய்யு ... *
எம்பெருமானந்தகோபாலாவெழுந்திராய் ... *
கொம்பனார்க்கெல்லாங்கொழுந்தேகுலவிளக்கே ... *
எம்பெருமாட்டியசோதாயறிவுறாய் ... *
அம்பரமூடறுத்தோங்கியுலகளந்த ... *
உம்பர்கோமானேயுறங்காதெழுந்திராய் ... *
செம்பொற்கழலடிச்செல்வாபலதேவா ... *
உம்பியுநீயுமுறங்கேலோரெம்பாவாய் ... (௰௭)

உந்துமதகளிற்றனோடாததோள்வலியன் ... *
நந்தகோபாலன்மருமகளேநப்பின்னாய் ... *
கந்தங்கமழுங்குழலீகடைதிறவாய் ... *
வந்தெங்குங்கோழியழைத்தனகாண்மாதவிப் ... *
பந்தன்மேற்பல்கால்குயிலினங்கள்கூவினகாண் ... *
பந்தார்விரலியுன்மைத்துனன்பேர்பாடச் ... *
செந்தாமரைக்கையாற்சீரார்வளையொலிப்ப ... *
வந்துதிறவாய்மகிழ்ந்தேலோரெம்பாவாய் ... (௰௮)

குத்துவிளக்கெரியக்கோட்டுக்காற்கட்டின்மேல் ... *
மெத்தென்றபஞ்சசயனத்தின்மேலேறிக் ... *
கொத்தலர்பூங்குழனப்பின்னைக்கொங்கைமேல் ... *
வைத்துக்கிடந்தமலர்மார்பாவாய்திறவாய் ... *
மைத்தடங்கண்ணினாய்நீயுன்மணாளனை ... *
எத்தனைபோதுந்துயிலெழவொட்டாய்காண் ... *

எத்தனையேலும்பிரிவாற்றகில்லாயால்... *
தத்துவமன்றுதகவேலோரெம்பாவாய்... (௰௯)

முப்பத்துமூவரமரர்க்குமுன்சென்று ... *
கப்பந்தவிர்க்குங்கலியேதுயிலெழாய்... *
செப்பமுடையாய்திறலுடையாய்செற்றார்க்கு... *
வெப்பங்கொடுக்கும்விமலாதுயிலெழாய் ... *
செப்பன்னமென்முலைச்செவ்வாய்ச்சிறுமருங்குல் ... *
நப்பின்னைநங்காய்திருவேதுயிலெழாய்... *
உக்கமுந்தட்டொளியுந்தந்துன்மணாளனை ... *
இப்போதேயெம்மைநீராட்டேலோரெம்பாவாய் ... (௨௰)

ஏற்றகலங்களெதிர்பொங்கிமீதளிப்ப... *
மாற்றாதேபால்சொரியும்வள்ளற்பெரும்பசுக்கள் ... *
ஆற்றப்படைத்தான்மகனேயறிவுறாய் ... *
ஊற்றமுடையாய்பெரியாயுலகினில்.. ... *
தோற்றமாய்நின்றசுடரேதுயிலெழாய்... *
மாற்றாருனக்குவலிதொலைந்துன்வாசற்கண் ... *
ஆற்றாதுவந்துன்னடிபணியுமாபோலே ... *
போற்றியாம்வந்தோம்புகழ்ந்தேலோரெம்பாவாய் ... (௨௧)

அங்கண்மாஞாலத்தரசாபிமான ... *
பங்கமாய்வந்துநின்பள்ளிக்கட்டிற்கீழே ... *
சங்கமிருப்பார்போல்வந்துதலைப்பெய்தோம்... *
கிங்கிணிவாய்ச்செய்ததாமரைப்பூப்போலே... *
செங்கண்சிறிச்சிறிதேயெம்மேல்விழியாவோ ... *
திங்களுமாதித்தியனுமெழுந்தாற்போல்... *
அங்கணிரண்டுங்கொண்டெங்கண்மேனோக்குதியேல்... *
எங்கண்மேற்சாபமிழிந்தேலோரெம்பாவாய்... (௨௨)

மாரிமலைமுழஞ்சின்மன்னிக்கிடந்துறங்கும் ... *
சீரியசிங்கமறிவுற்றுத்தீவிழித்து... *
வேரிமயிர்பொங்கவெப்பாடும்பேர்ந்துதறி ... *
மூரிநிமிர்ந்துமுழங்கிப்புறப்பட்டு ... *
போதருமாபோலேநீபூவைப்பூவண்ணாவுன் ... *
கோயினின்றிங்ஙனேபோந்தருளிக்கோப்புடைய... *
சீரியசிங்காசனத்திருந்தியாம்வந்த... *
காரியமாராய்ந்தருளேலோரெம்பாவாய்... (௨௩)

அன்றிவ்வுலகமளந்தாயடிபோற்றி... ... ... *
சென்றங்குத்தென்னிலங்கைசெற்றாய்திறல்போற்றி... ... ...*
பொன்றச்சகடமுதைத்தாய்புகழ்போற்றி... ... ...*
கன்றுகுணிலாவெறிந்தாய்கழல்போற்றி ... ... *
குன்றுகுடையாவெடுத்தாய்குணம்போற்றி ... ... *
வென்றுபகைகெடுக்குநின்கையில்வேல்போற்றி... ... ... *
என்றென்றுன்சேவகமேயேத்திப்பறைகொள்வான் ... ... *
இன்றியாம்வந்தோமிரங்கேலோரெம்பாவாய் ... ... (௨௪)

ஒருத்திமகனாய்ப்பிறந்தோரிரவில்... ... ...*
ஒருத்திமகனாயொளித்துவளரத்... ... ... *
தருக்கிலானாகித்தான்றீங்குநினைந்த ... ...*
கருத்தைப்பிழைப்பித்துக்கஞ்சன்வயிற்றில்... ... ... *
நெருப்பென்னநின்றநெடுமாலேயுன்னை ... ... *
அருத்தித்துவந்தோம்பறைதருதியாகில்... ... ...*
திருத்தக்கசெல்வமுஞ்சேவகமும்யாம்பாடி... ... ... *
வருத்தமுந்தீர்ந்துமகிழ்ந்தேலோரெம்பாவாய்... ... ...(௨௫)

மாலேமணிவண்ணாமார்கழிநீராடுவான் ... ... *
மேலையார்செய்வனகள்வேண்டுவனகேட்டியேல் ... ... *
ஞாலத்தையெல்லாநடுங்கமுரல்வன... ... ...*
பாலன்னவண்ணத்துன்பாஞ்சசன்னியமே... ... ... *
போல்வனசங்கங்கள்போய்ப்பாடுடையனவே ... ... *
சாலப்பெரும்பறையேபல்லாண்டிசைப்பாரே... ... ... *
கோலவிளக்கேகொடியேவிதானமே... ... ... *
ஆலினிலையாயருளேலோரெம்பாவாய்... ... ... (௨௬)

கூடாரைவெல்லுஞ்சீர்க்கோவிந்தாவுன்றன்னைப் ... ... *
பாடிப்பறைகொண்டியாம்பெறுசன்மானம்... ... ... *
நாடும்புகழும்பரிசினானன்றாகச் ... ... *
சூடகமேதோள்வளையேதோடேசெவிப்பூவே... ... ...*
பாடகமேயென்றனையபலகலனும்யாமணிவோம்... ... *
ஆடையுடுப்போமதன்பின்னேபாற்சோறும்... ... ... *
மூடநெய்பெய்துமுழங்கைவழிவாரக்... ... ... *
கூடியிருந்துகுளிர்ந்தேலோரெம்பாவாய்... ... ...(௨௭)

கறவைகள்பின்சென்றுகானஞ்சேர்ந்துண்போம்... ... *
அறிவொன்றுமில்லாதவாய்க்குலத்துன்றன்னைப் ... ... *

பிறவிபிறந்தனைப்புண்ணியநாமுடையோம் *
குறைவொன்றுமில்லாதகோவிந்தாவுன்றன்னோ *
டுறவேனமக்கிங்கொழிக்கவொழியா *
தறியாதபிள்ளைகளோமன்பினாலுன்றன்னைச் *
சிறுபேரழைத்தனவுஞ்சீறியருளாதே *
இறைவாநீதாராய்பறையேலோரெம்பாவாய் (உஅ)

சிற்றஞ்சிறுகாலேவந்துன்னைச்சேவித்துன் *
பொற்றாமரையடியேபோற்றும்பொருள்கேளாய் *
பெற்றமேய்த்துண்ணுங்குலத்திற்பிறந்துநீ *
குற்றேவலெங்களைக்கொள்ளாமற்போகா *
தின்றைப்பறைகொள்வானன்றுகாண்கோவிந்தா *
எற்றைக்குமேழேழ்பிறவிக்குமுன்றன்னோ *
டுற்றோமேயாவோமுனக்கேநாமாட்செய்வோம் *
மற்றைநங்காமங்கண்மாற்றேலோரெம்பாவாய் (உகூ)

வங்கக்கடல்கடைந்தமாதவனைக்கேசவனைத் *
திங்கட்டிருமுகத்துச்சேயிழையார்சென்றிறைஞ்சி *
அங்கப்பறைகொண்டவாற்றையணிபுதுவைப் *
பைங்கமலத்தண்டெரியற்பட்டர்பிரான்கோதைசொன்ன *
சங்கத்தமிழ்மாலைமுப்பதுந்தப்பாமே *
இங்கிப்பரிசுரைப்பாரீரிரண்டுமால்வரைத்தோள் *
செங்கட்டிருமுகத்துச்செல்வத்திருமாலால் *
எங்குந்திருவருள்பெற்றின்புறுவரெம்பாவாய் (௩௰)

நாச்சியார்திருவடிகளே சரணம்,

திருப்பாவைமுற்றிற்று,

—*—

பூச்சூட்டல்-ஆனிரை,

(அறுசீர்க்கழிநெடில்-ஆசிரிய விருத்தம்)

ஆனிரைமேய்க்கநீபோதியருமருந்தாவதறியாய் *
கானகமெல்லாந்திரிந்துன்கரியதிருமேனிவாடப் *
பானையிற்பாலைப்பருகிப்பற்றாதாரெல்லாஞ்சிரிப்பத் *
தேனிலினியபிரானேசெண்பகப்பூச்சூட்டவாராய் (க)
கருவுடைமேகங்கள்கண்டாலுன்னைக்கண்டாலொக்குங்கண்கள் *
உருவுடையாயுலகேழுமுண்டாகவந்துபிறந்தாய் *

திருவுடையாண்மணவாளாதிருவரங்கத்தேகிடந்தாய் ... ... *
மருவிமணங்கமழ்கின்றமல்லிகைப்பூச்சூட்டவாராய்... ... (௨)

மச்சொடுமாளிகையேறிமாதர்கடம்மிடம்புக்கு ... ...*
கச்சொடுபட்டைக்கிழித்துக்காம்புதுகிலவைகீறி... ... ... *
நிச்சலுந்தீமைகள்செய்வாய்நீடிருவேங்கடத்தெந்தாய் ... ...*
பச்சைதமனகத்தோடுபாதிரிப்பூச்சூட்டவாராய் ... ... (௩)

தெருவின்கணின்றிளவாய்ச்சிமார்களைத்தீமைசெய்யாதே... .*
மருவுந்தமனகமுஞ்சீர்மாலைமணங்கமழ்கின்ற... ... ... *
புருவங்கருங்குழனெற்றிப்பொலிந்தமுகிற்கன்றுபோலே ... *
உருவமழகியநம்பீயுகந்திவைசூட்டநீவாராய் ... ... (௪)

புள்ளினைவாய்பிளந்திட்டாய்பொருகரியின்கொம்பொசித்தாய்... *
கள்ளவரக்கியைமூக்கொடுகாவலனைத்தலைகொண்டாய்... ... ... *
அள்ளிநீவெண்ணெய்விழுங்கவஞ்சாதடியேனடித்தேன்.. ... *
தெள்ளியநீரிலெழுந்தசெங்கழுநீர்சூட்டவாராய்... ... ...(ரு)

எருதுகளோடுபொருதியேதுமுலோபாய்காணம்பீ... ... ..*
கருதியதீமைகள்செய்துகஞ்சனைக்கால்கொடுபாய்ந்தாய் ... *
தெருவின்கட்டீமைகள்செய்துசிக்கெனமல்லர்களோடு ... ... *
பொருதுவருகின்றபொன்னேபுன்னைப்பூச்சூட்டநீவாராய் ... (௬)

குடங்களெடுத்தேறவிட்டுக்கூத்தாடவல்லவெங்கோவே ... *
மடங்கொண்மதிமுகத்தாரைமால்செய்யவல்லவென்மைந்தா... ... *
இடந்திட்டிரணியனெஞ்சையிருபிளவாகமுன்கீண்டாய்... ... *
குடந்தைக்கிடந்தவெங்கோவேகுருக்கத்திப்பூச்சூட்டவாராய் ... (௭)

சீமாலிகனவனோடுதோழமைகொள்ளவும்வல்லாய்... ... ... *
சாமாறவனைநீயெண்ணிச்சக்கரத்தாற்றலைகொண்டாய் ... *
ஆமாறறியும்பிரானேயணியரங்கத்தேகிடந்தாய்... ... ... *
ஏமாற்றமென்னைத்தவிர்த்தாயிருவாட்சிப்பூச்சூட்டவாராய் ... (௮)

அண்டத்தமரர்கள்சூழவத்தாணியுள்ளங்கிருந்தாய் ... ...*
தொண்டர்கணெஞ்சிலுறைவாய்தூமலராண்மணவாளா ... *
உண்டிட்டுலகினையேழுமோராலிலையிற்றுயில்கொண்டாய்... ... *
கண்டுநானுன்னையுகக்கக்கருமுகைப்பூச்சூட்டவாராய் ... (௯)

செண்பகமல்லிகையோடுசெங்கழுநீரிருவாட்சி... ... ... *
எண்பகர்பூவுங்கொணர்ந்தேனின்றிவைசூட்டவாவென்று... ... *

மண்பகர்கொண்டானையாய்ச்சிமகிழ்ந்துரைசெய்தவிம்மாலை... *
பண்பகர்வில்லிபுத்தூர்க்கோன்பட்டர்பிரான்சொன்னபதத்தே... (௰)
பெரியாழ்வார்திருவடிகளேசரணம்,

காப்பிடல்-இந்திரனோடு
(அறுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்)

இந்திரனோடுபிரமனீசனிமையவரெல்லாம் ... ... *
மந்திரமாமலர்கொண்டுமறைந்தவராய்வந்துநின்றார் ... ... *
சந்திரன்மாளிகைசேருஞ்சதுரர்கள்வெள்ளறைநின்றாய்... ... ...*
அந்தியம்போதிதுவாகுமழகனேகாப்பிடவாராய்... ... ... (௧)

கன்றுகளில்லம்புகுந்துகதறுகின்றபசுவெல்லாம்... ... *
நின்றொழிந்தேனுன்னைக்கூவிநேசமேயொன்றுமிலாதாய் ... ... *
மன்றினிலேவந்திப்போதுமதிட்டிருவெள்ளறைநின்றாய்... ... *
நன்றுகண்டாயென்றன்சொல்லுநானுன்னைக்காப்பிடவாராய்... (௨)

செப்போதுமென்முலையார்கள்சிறுசோறுமில்லுஞ்சிதைத்திட் ... *
டப்போதுநானுரப்பப்போயடிசிலுமுண்டிலையாள்வாய் ... *
முப்போதும்வானவரேத்துமுனிவர்கள்வெள்ளறைநின்றாய் ... *
இப்போதுநானொன்றுஞ்செய்யேனெம்பிரான்காப்பிடவாராய் ... (௩)

கண்ணினமணற்கொடுதூவிக்காலினாற்பாய்ந்தனையென்றென்... ...*
றெண்ணரும்பிள்ளைகள்வந்திட்டிவரான்முறைப்படுகின்றார்... ... *
கண்ணனேவெள்ளறைநின்றாய்கண்டாரோடேதீமைசெய்வாய் ... *
வண்ணமேவேலையதொப்பாய்வள்ளலேகாப்பிடவாராய்... ... (௪)

பல்லாயிரவரிவ்வூரிற்பிள்ளைகடீமைகள்செய்வார்... ... ... *
எல்லாமுன்மேலன்றிப்போகாதெம்பிரானீயிங்கேவாராய் ... *
நல்லார்கள்வெள்ளறைநின்றாய்ஞானச்சுடரேயுன்மேனி ... ...*
சொல்லாரவாழ்த்திநின்றேத்திச்சொப்படக்காப்பிடவாராய் ... (௫)

கஞ்சன்கறுக்கொண்டுநின்மேற்கருநிறச்செம்மயிர்ப்பேயை... ...*
வஞ்சிப்பதற்குவிடுத்தானென்பதோர்வார்த்தையுமுண்டு... ... *
மஞ்சுதவழ்மணிமாடமதிட்டிருவெள்ளறைநின்றாய்... ... ...*
அஞ்சுவனீயிங்குநிற்கவழகனேகாப்பிடவாராய் ... ... (௬)

கள்ளச்சகடுமருதுங்கலக்கழியவுதைசெய்த ... ... *
பிள்ளையரசேநீபேயைப்பிடித்துமுலையுண்டபின்னை ... ... *
உள்ளவாறொன்றுமறியேனொளிதிகழ்வெள்ளறைநின்றாய் ... *
பள்ளிகொள்போதிதுவாகும்பரமனேகாப்பிடவாராய் ... (௭)

இன்பமதனையுயர்த்தாயிமையவர்க்கென்றுமரியாய்... ... ... ❋
கும்பக்களிறட்டகோவேகொடுங்கஞ்சனெஞ்சினிற்கூற்றே... ... ❋
செம்பொன்மதில்வெள்ளறையாய்செல்வத்தினால்வளர்பிள்ளாய்... ❋
கம்பக்கபாலிகாணங்குகடிதோடிக்காப்பிடவாராய் ... (௮)
இருக்கொடுநீர்சங்கிற்கொண்டிட்டெழில்மறையோர்வந்துநின்றார் ... ❋
தருக்கேனம்பிசந்திநின்றுதாய்சொல்லுக்கொள்ளாய்சிலநாள் ... ... ❋
திருக்காப்புநானுன்னைச்சாத்தத்தேசுடைவெள்ளறைநின்றாய் ... . ❋
உருக்காட்டுமந்திவிளக்கின்றொளிகொள்ளவேற்றுகேன்வாராய்... ...(௯)
போதமர்செல்வக்கொழுந்துபுணர்திருவெள்ளறையானை... ... ஃ
மாதர்க்குயர்ந்தவசோதைமகன்றன்னைக்காப்பிட்டமாற்றம் ... ❋
வேதப்பயன்கொள்ளவல்லவிட்டுசித்தன்சொன்னமாலை... ... ❋
பாதப்பயன்கொள்ளவல்லபத்தருள்ளார்வினைபோமே... ... (௰)

பெரியாழ்வார்திருவடிகளேசரணம்.

காப்பிடல்-முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

செ ன் னி யோ ங் கு.

கலி விருத்தம்,

சென்னியோங்குதண்டிருவேங்கடமுடையாயுலகு... ... ... ❋
தன்னைவாழநின்றநம்பிதாமோதராசதிரா ... ... ❋
என்னையுமென்னுடைமையுமுன்சக்கரப்பொறியொற்றிக்கொண்டு... ...❋
நின்னருளேபுரிந்திருந்தேனினியுன்திருக்குறிப்பே... ... (௧)
பறவையேறும்பரமபுருடாநீயென்னைக்கைக்கொண்டபின்... ... ❋
பிறவியென்னுங்கடலும்வற்றிப்பெரும்பதமாகின்றதால் ... ❋
இறவுசெய்யும்பாவக்காடுதீக்கொளுவிவேகின்றதால் ... .❋
அறவையென்னுமமுதவாறுதலைப்பற்றிவாய்க்கொண்டதே ... (௨)
எம்மனாவென்குலதெய்வமேயென்னுடைநாயகனே... ... ❋
நின்னுளேனாய்ப்பெற்றநன்மையிவ்வுலகினிலார்பெறுவார் ... ❋
நம்மன்போல்வீழ்த்தமுக்குநாட்டிலுள்ளபாவமெல்லாம்... ... ❋
சும்மெனாதேகைவிட்டோடித்தூறுகள்பாய்ந்தனவே... ... (௩)
கடல்கடைந்தமுதங்கொண்டுகலசத்தைநிறைத்தாப்போல்... ... ❋
உடலுருகிவாய்திறந்துமடுத்துன்னைநிறைத்துக்கொண்டேன்... ... ஃ

கொடுமைசெய்யுங்கூற்றமுமென்கோலாடிகுறுகப்பெறா... ... *
தடவரைத்தோட்சக்கரபாணிசார்ங்கவிற்சேவகனே... ... (௪)

பொன்னைக்கொண்டுரைகன்மீதேநிறமெழவுரைத்தாற்போல் ... *
உன்னைக்கொண்டென்னாவகம்பான்மாற்றின்றியுரைத்துக்கொண்டேன் *
உன்னைக்கொண்டென்னுள்வைத்தேனென்னையுமுன்னிலிட்டேன் ... ...*
என்னப்பாவென்னிருடிகேசாவென்னுயிர்க்காவலனே ... (௫)

உன்னுடையவிக்கிரமமொன்றொழியாமலெல்லாம்... ... *
என்னுடையநெஞ்சகம்பாற்சுவர்வழியெழுதிக்கொண்டேன் ... *
மன்னடங்கமழுவலங்கைக்கொண்டவிராமநம்பீ... ... ... *
என்னிடைவந்தெம்பெருமானினியெங்குப்போகின்றதே... ...(௬)

பருப்பதத்திற்கயல்பொறித்தபாண்டியர்தங்குலபதிபோல் ... *
திருப்பொலிந்தசேவடியென்சென்னியின்மேற்பொறித்தாய் ... *
மருப்பொசித்தாய்மல்லடர்த்தாயென்றென்றுன்வாசகமே ... ...*
உருப்பொலிந்தநாவினேனையுனக்குரித்தாக்கினையே... ... (௭)

அனந்தன்பாலுங்கருடன்பாலுமைதுநொய்தாகவைத்தென் ... *
மனந்தனுள்ளேவந்துவைகிவாழச்செய்தாயெம்பிரான்... ... *
நினைந்தென்னுள்ளேநின்றுநின்றுநெக்குக்கண்களசும்பொழுக ... *
நினைந்திருந்தேசிரமந்தீர்ந்தேனேமிநெடியவனே... ... (௮)

பனிக்கடலுட்பள்ளிகோளைப்பழகவிட்டோடிவந்தென்... ... *
மனக்கடலுள்வாழவல்லமாயமணாளநம்பி... ... ... *
தனிக்கடலேதனிச்சுடரேதனியுலகேயென்றென் ... ... *
றுனக்கிடமாயிருக்கவென்னையுனக்குரித்தாக்கினையே ... ... (௯)

தடவரைவாய்மிளிர்ந்துமின்னுந்தவளநெடுங்கொடிபோல்... .. *
சுடரொளியாய்நெஞ்சினுள்ளேதோன்றுமென்சோதிநம்பீ ... ...*
வடதடமும்வைகுந்தமுமதிட்டுவாரபதியும் ... ... *
இடவகைகளிகழ்ந்திட்டென்பாலிடவகைகொண்டனையே... ... (௰)

வேயர்தங்கள்குலத்துதித்தவிட்டுசித்தன்மனத்தே ... ...*
கோயில்கொண்டகோவலனைக்கொழுங்குளிர்முகில்வண்ணனை ... *
ஆயரேற்றையமரர்கோவையந்தணர்தமமுதத்தினைச்... ... *
சாயைபோலப்பாடவல்லார்தாமுமணுக்கர்களே... ... (௰௧)

பெரியாழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

திருப்பாணாழ்வார்:

திருவாய்மலர்ந்தருளியவேதஸாரம்,

ஆபாதசூடமநுபூயஹரிம்ஶயாநம்
மத்யேகவேரதுஹிதுர்முதிதாந்தராத்மா
அத்ரஷ்டதாந்நயநயோர்விஷயாந்தராணாம்
யோநிஶ்சிகாயமநவேமுநிவாஹநந்தம்

கலி நிலைத்துறை.

காட்டவேகண்டபாதங்கமலநல்லாடையுந்தி
தேட்டருமுதரபந்தந்திருமார்புகண்டஞ்செவ்வாய்
வாட்டமில்கண்களுமேனிமுனியேறித்தனிபுகுந்து
பாட்டினாற்கண்டுவாழும்பாணர்தாள்பரவினோமே

(திவ்யமங்களவிக்ரஹத்திருவவயவச்சீர்த்தி

வெண்டுறை

அமலனாதிபிரானடியார்க்கென்னையாட்படுத்த
விமலன்விண்ணவர்கோன்விரையார்பொழில்வேங்கடவன்
நிமலனின்மலனீதிவானவனீண்மதிளரங்கத்தம்மான்திருக்
கமலபாதம்வந்தென்கண்ணினுள்ளனவொக்கின்றதே (௧)

உவந்தவுள்ளத்தனாயுலகமளந்தண்டமுற
நிவந்தநீண்முடியனன்றுநேர்ந்தநிசாசரரைக்
கவர்ந்தவெங்கணைக்காகுத்தன்கடியார்பொழிலரங்கத்தம்மானரைச்
சிவந்தவாடையின்மேற்சென்றதாமென்சிந்தனையே (௨)

மந்திபாய்வடவேங்கடமாமலைவானவர்கள்
சந்திசெய்யநின்றானரங்கத்தரவினணையான்
அந்திபோனிறத்தாடையுமதன்மேலயனைப்படைத்ததோரெழில்
உந்திமேலதன்றோவடியேனுள்ளத்தின்னுயிரே (௩)

சதுரமாமதிள்சூழிலங்கைக்கிறைவன்றலைபத்
துதிரவோட்டியோர்வெங்கணையுய்த்தவனோதவண்ணன்
மதுரமாவண்டுபாடமாமயிலாடரங்கத்தம்மான்திருவயிற்
றுதரபந்தமென்னுள்ளத்துணின்றுலாகின்றதே (௪)

பாரமாயபழவினைபற்றறுத்தென்னைத்தன்
வாரமாக்கிவைத்தான்வைத்ததன்றியென்னுட்புகுந்தான்
கோரமாதவஞ்செய்தனன்கொலறியேனரங்கத்தம்மான்திரு
வாரமார்பதன்றோவடியேனையாட்கொண்டதே (௫)

துண்டவெண்பிறையன்றுயர்தீர்த்தவனஞ்சிறைய ... ... *
வண்டுவாழ்பொழில்சூழரங்கநகர்மேயவப்பன்... ... ... *
அண்டரண்டபகிரண்டத்தொருமாநிலமேழுமால்வரைமுற்றும்........*
உண்டகண்டங்கண்டீரடியேனையுய்யக்கொண்டதே ... ...( )

கையினார்சுரிசங்கனலாழியர்நீள்வரைபோல் ... ... *
மெய்யனார்துளபவிரையார்கமழ்நீண்முடியெம்... ... ... *
ஐயனாரணியரங்கனாரரவினணைமிசைமேயமாயனார்... ... ...*
செய்யவாயையோவென்னைச்சிந்தைகவர்ந்ததுவே... ... (எ)

பரியனாகிவந்தவவுணனுடல்கீண்டவமரர்க்... ... ... *
கரியவாதிப்பிரானரங்கத்தமலன்முகத்துக்... ... ... *
கரியவாகிப்புடைபரந்துமிளிர்ந்துசெவ்வரியோடிநீண்டவப்... ... *
பெரியவாயகண்களென்னைப்பேதைமைசெய்தனவே... ... (அ)

ஆலமாமரத்தினிலைமேலொருபாலகனாய்... ... ... *
ஞாலமேழுமுண்டானரங்கத்தரவினணையான்... ... ...*
கோலமாமணியாரமுமுத்துத்தாமமுமுடிவில்லதோரெழில் ... ...ஐ
நீலமேனியையோநிறைகொண்டதென்னெஞ்சினையே... ...(கூ)

கொண்டல்வண்ணனைக்கோவலனாய்வெண்ணெய்... ... ... *
உண்டவாயனென்னுள்ளங்கவர்ந்தானை... ... ... *
அண்டர்கோனணியரங்கனென்னமுதினைக் ... ... *
கண்டகண்கள்மற்றொன்றினைக்காணாவே... ... ...(௰)

திருப்பாணாழ்வார்திருவடிகளேசரணம்.

மதுரகவியாழ்வார்

திருவாய்மலர்ந்தருளியஆசாரியநிஷ்டை.

அவிதிதவிஷயாந்தரஶ்ஶடாரே... ... ... *
ருபநிஷதாமுபகாநமாத்ரபோக: ... ... *
அபிசகுணவசாத்ததைகசேஷீ ... ... *
மதுரகவிர்ஹ்ருதயேமமாவிரஸ்து ... ... *

இருவிகற்பநேரிசைவெண்பா.

வேறொன்றுநானறியேன்வேதந்தமிழ்செய்த... ...*
மாறன்சடகோபன்வண்குருகூர்—ஏறெங்கள் ...*
வாழ்வாமென்றேத்துமதுரகவியாரெம்மை ... ... *
ஆள்வாரவரேயரண்......... ... ... *

குருகூர்நம்பிவிஷயம்—கலிவிருத்தம்.

கண்ணிநுண்சிறுதாம்பினாற்கட்டுண்ண... ... *
பண்ணியபெருமாயனென்னப்பனில்... ... *
நண்ணித்தென்குருகூர்நம்பியென்றக்கால் ... ... *
அண்ணிக்குமமுதூறுமென்னாவுக்கே ... (௧)

நாவினால்நவிற்றின்பமெய்தினேன்... ... ...*
மேவினேனவன்பொன்னடிமெய்ம்மையே ... ... *
தேவுமற்றறியேன்குருகூர்நம்பி... ... ...*
பாவினின்னிசைபாடித்திரிவனே ... ... (௨)

திரிதந்தாகிலுந்தேவபிரானுடைக் ... ... *
கரியகோலத்திருவுருக்காண்பனான் ... ... *
பெரியவண்குருகூர்நகர்நம்பிக்காள் ... ... *
உரியனாயடியேன்பெற்றநன்மையே... ... (௩)

நன்மையான்மிக்கநான்மறையாளர்கள் ... ... *
புன்மையாகக்கருதுவராதலில் ... ... *
அன்னையாயத்தனாயென்னையாண்டிடும் ... ... *
தன்மையான்சடகோபனென்னம்பியே... ... (௪)

நம்பினேன்பிறர்நன்பொருடன்னையும் ... ... *
நம்பினேன்மடவாரையுமுன்னெலாம்... ... ... *
செம்பொன்மாடத்திருக்குருகூர்நம்பிக் ... ... *
கன்பனாயடியேன்சதிர்த்தேனின்றே... ... ... (௫)

இன்றுதொட்டுமெழுமையுமெம்பிரான்... ... ... *
இன்றுதன்புகழேத்தவருளினான்... ... ... *
குன்றமாடத்திருக்குருகூர்நம்பி ... ...*
என்றுமென்னையிகழ்விலன்காண்மினே ....(௬)

கண்டுகொண்டென்னைக்காரிமாறப்பிரான் ... ... *
பண்டைவல்வினைபாற்றியருளினான் ... ... *
எண்டிசையுமறியவியம்புகேன் ... ... *
ஒண்டமிழ்ச்சடகோபனருளையே... ... ...(௭)

அருள்கொண்டாடுமடியவரின்புற ... ... *
அருளினானவ்வருமறையின்பொருள் ... ... *
அருள்கொண்டாயிரமின்றமிழ்ப்பாடினான் ... ...*
அருள்கண்டீரிவ்வுலகினின்மிக்கதே ... ...(௮)

மிக்கவேதியர்வேதத்தினுட்பொருள் ... ...*
நிற்கப்பாடியென்னெஞ்சுணிறுத்தினான் ... ... *
தக்கசீர்ச்சடகோபனென்னம்பிக்காட்... ... ... *
புக்ககாதலடிமைப்பயனன்றே ... ... (௯)

பயனன்றாகிலும்பாங்கல்லராகிலும்... ... ... *
செயனன்றாகத்திருத்திப்பணிகொள்வான் ... ...*
குயினின்றார்பொழில்சூழ்குருகூர்நம்பி... ... ...*
முயல்கின்றேனுன்றன்மொய்கழற்கன்பையே ... ...(௰)

அன்பன்றன்னையடைந்தவர்கட்கெலாம் .. ..*
அன்பன்றென்குருகூர்நகர்நம்பிக்... ... ... *
கன்பனாய்மதுரகவிசொன்னசொல்... ... ... *
நம்புவார்பதிவைகுந்தங்காண்மினே ... ... (௰௧)

மதுரகவியாழ்வார் - திருவடிகளேசரணம்,

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கோயிற்றிருவாய்மொழி.

ஆழ்வார்திருவடிகளேசரணம்,

பக்தாம்ருதம்விச்வஜநாநுமோதநம்.............*
ஸர்வார்த்ததம்ஸ்ரீசடகோபவாங்மயம்.............*
ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகமம்.............*
நமாம்யஹம்த்ராவிடவேதஸாகரம்.............*

தனியன்

திருவழுதிநாடென்றுந்தென்குருகூரென்றும்.............*
மருவினியவண்பொருநலென்றும்-அருமறைகள்... ......*
அந்தாதிசெய்தானடியிணையேயெப்பொழுதும்.............*
சிந்தியாய்நெஞ்சேதெளிந்து.............*

மனத்தாலும்வாயாலும்வண்குருகூர்ப்பேணும் ....*
இனத்தாரையல்லாதிறைஞ்சேன்-தனத்தாலும்.... ....உ
ஏதுங்குறைவிலேனெந்தைசடகோபன்....... ....*
பாதங்கள்யாமுடையபற்று.............*

ஏய்ந்தபெருங்கீர்த்தியிராமாநுஜமுனிதன்.... ... .*
வாய்ந்தமலர்ப்பாதம்வணங்குகின்றேனாய்ந்தபுகழ்ச் ......*

சீரார்சடகோபன்செந்தமிழ்வேதந்தரிக்கும்... ... *
பேராதவுள்ளம்பெற... ... ... *
வான்றிகழுஞ்சோலைமதிளரங்கர்வண்புகழ்மேல்... ... *
ஆன்றதமிழ்மறைகளாயிரமும்-ஈன்ற ... ... *
முதற்றாய்சடகோபன்மொய்ம்பால்வளர்த்த... ... *
இதத்தாயிராமாநுஜன்... ... ... *

மிக்கவிறைநிலையுமெய்யாமுயிர்நிலையும்... ... *
தக்கநெறியுந்தடையாகித்,தொக்கியலும் ... ... *
ஊழ்வினையும்வாழ்வினையுமோதுங்குருகையர்கோன் ... *
யாழினிசைவேதத்தியல்... ... ... *

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

கலிவிருத்தம்-பண்-முதிர்ந்த குறிஞ்சி.

உயர்வறவுயர்நலமுடையவனெவனவன்... ... ... *
மயர்வறமதிநலமருளினனெவனவன்... ... ... *
அயர்வறுமமரர்களதிபதியெவனவன்... ... ... *
துயரறுசுடரடிதொழுதெழன்மனனே ... ... (௧)

மனனகமலமறமலர்மிசையெழுதரு... ... ... *
மனனுணர்வளவிலன்பொறியுணர்வவையிலன்... ... ... *
இனனுணர்முழுநலமெதிர்நிகழ்கழிவினும்... ... ... *
இனனிலனெனனுயிர்மிகுநரையிலனே ... ... (௨)

இலனதுவுடையனிதெனநினைவரியவன்... ... ... *
நிலனிடைவிசும்பிடையுருவினனருவினன்... ... ... *
புலனொடுபுலனலனொழிவிலன்பரந்தவந்... ... ... *
நலனுடையொருவனைநணுகினநாமே ... ... (௩)

நாமவனிவனுவனவளிவளுவளெவள்... ... ... *
தாமவரிவருவரதுவிதுவுதுவெது .... *
வீமவையிவையுவையவைநலதீங்கவை ... ... *
யாமவையாயவையாய்நின்றவவரே... ... ... (௪)

அவரவர்தமதமதறிவறிவகைவகை ... ... *
அவரவரிறையவரெனவடியடைவர்கள் ... ... *
அவரவரிறையவர்குறைவிலரிறையவர் ... ... *
அவரவர்விதிவழியடையநின்றனரே... ... ... (௫)

நின்றனரிருந்தனர்கிடந்தனர்திரிந்தனர்... ... ... *
நின்றிலரிருந்திலர்கிடந்திலர்திரிந்திலர்... ... ... *
என்றுமொரியல்வினரெனநினைவரியவர் ... ... *
என்றுமொரியல்வொடுநின்றவெந்திடரே ... ... (சு)

திடவிசும்பெரிவளிநீர்நிலமிவைமிசைப்... ... ... *
படர்பொருண்முழுவதுமாயவையவைதொறும்... .... *
உடன்மிசையுயிரெனக்கரந்தெங்கும்பரந்துளன்... ... ... *
சுடர்மிகுசுருதியுளிவையுண்டசுரனே... ... ... (எ)

சுரரறிவருநிலைவிண்முதன்முழுவதும் ... ... *
வரன்முதலாயவைமுழுதுண்டபரபரன்... ... ... *
புரமொருமூன்றெரித்தமரர்க்குமறிவியந் ... ... *
தரனயனெனவுலகழித்தமைத்துளனே ... ... (அ)

உளனெனிலுளனவனுருவமிவ்வுருவுகள்... ... ... *
உளனலனெனிலவனருவமிவ்வுருவுகள்... ... ... *
உளனெனவிலனெனவிவைகுணமுடைமையில்... ... ... *
உளனிருதகைமையொடொழிவிலன்பரந்தே... ... ... (கூ)

பரந்ததண்பரவையுணீர்தொறும்பரந்துளன்... ... ... *
பரந்தவண்டமிதெனநிலவிசும்பொழிவற... ... ... *
கரந்தசில்லிடந்தொறுமிடந்திகழ்பொருடொறும்... ... ... *
கரந்தெங்கும்பரந்துளனிவையுண்டகரனே... ... ... (ய)

கரவிசும்பெரிவளிநீர்நிலமிவைமிசை... ... ... *
வரனவிறிறல்வலியளிபொறையாய்நின்ற... ... ... *
பரனடிமேற்குருகூர்ச்சடகோபன்சொல்... ... ... *
நிரனிறையாயிரத்திவைபத்தும்வீடே... ... ...(யக)

ஆழ்வார்திருவடிகளே சரணம்,

வஞ்சித்துறை-பண்-முதிர்ந்தகுறிஞ்சி,

வீடுமின்முற்றவும்... ... ... *
வீடுசெய்தும்முயிர் ... ... *
வீடுடையானிடை... ... ... *
வீடுசெய்ம்மினே ... ... (க)

மின்னின்னிலையில ... ... *
மன்னுயிராக்கைகள் ... ...*
என்னுமிடத்திறை ... ... *
உன்னுமினீரே ... ... (உ)

நீர்நுமதென்றிவை... ... ...*
வேர்முதன்மாய்த்திறை... ... *

அடங்கெழில்சம்பத்... ... ...*
தடங்கக்கண்டீசன் ... ... *

சேர்மினுயிர்க்கதன்... ... ... *
நேர்நிறையில்லே... ... (ரு)
இல்லதுமுள்ளதும் ... ... *
அல்லதவனுரு... ... ... *
எல்லையிலந்நலம்... ... ... *
புல்குபற்றற்றே ... ... (சா)
அற்றதுபற்றெனில் ... ... *
உற்றதுவீடுயிர் ... ...*
செற்றதுமன்னுறில் ... ... *
அற்றிறைபற்றே... ... ...(௬)
பற்றிலனீசனும் ... ...*
முற்றவுநின்றனன் ... ... *
பற்றிலையாயவன் ... ...*
முற்றிலடங்கே... ... .(சா)

அடங்கெழிலஃதென் ... ..*
அடங்குகவுள்ளே... ... ... (எ)
உள்ளமுரைசெயல்... ... .. *
உள்ளவிம்மூன்றையும்... ... *
உள்ளிக்கெடுத்திறை... ... ...*
உள்ளிலொடுங்கே... ... ...(அ
ஒடுங்கவவன்கண் .. .. *
ஒடுங்கலுமெல்லாம்... ... ...*
விடும்பின்னுமாக்கை... ... ...*
விடும்பொழுதெண்ணே... ...(கூ)
எண்பெருக்கந்நலத்...............*
ஒண்பொருளீறில்...... ......*
வண்புகழ்நாரணன்...............*
திண்கழல்சேரே......... ....(ய)

சேர்த்தடத்தென்குரு-கூர்ச்சடகோபன்சொல்... ...*
சீர்த்தொடையாயிரத்.தோர்த்தவிப்பத்தே.........(யக)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

——*1*——

கலிவிருத்தம்-பண்-நட்டம்.

கிளரொளியிளமைகெடுவதன்முன்னம்... ... ... *
வளரொளிமாயோன்மருவியகோயில்... ... ... *
வளரிளம்பொழில்சூழ்மாலிருஞ்சோலை... ... ...*
தளர்விலராகிச்சார்வதுசதிரே... ... ...(க)
சதிரிளமடவார்தாழ்ச்சியைமதியா... ... ... *
அதிர்குரல்சங்கத்தழகர்தங்கோயில்.. ... ... *
மதிதவழ்குடுமிமாலிருஞ்சோலைப் ... ...*
பதியதுவேத்தியெழுவதுபயனே... ... ... (உ)
பயனலசெய்துபயனிலைநெஞ்சே ... ...*
புயன்மழைவண்ணர்புரிந்துறைகோயில்... ... *
மயன்மிகுபொழில்சூழ்மாலிருஞ்சோலை... *
அயன்மலையடைவதுகருமம்மே... ... (௩)
கருமவன்பாசங்கழித்துழன்றுய்யவே ... ... *
பெருமலையெடுத்தான்பீடுறைகோயில்... ... *
வருமழைதவழுமாலிருஞ்சோலைத்... ... ... *
திருமலையதுவேயடைவதுதிறமே ... ... (௪)

திறமுடைவலத்தால்தீவினைபெருக்கா... ... ... *
அறமுயலாழிப்படையவன்கோயில்... ... ... *
மறுவில்வண்சுனைசூழ்மாலிருஞ்சோலை... ... ... *
புறமலைசாரப்போவதுகிறியே... ... ... (ரு)

கிறியெனநினைமின்கீழ்மைசெய்யாதே... ... *
உறியமர்வெண்ணெயுண்டவன்கோயில் ... *
மறியொடுபிணைசேர்மாலிருஞ்சோலை... ... ...*
நெறிபடவதுவேநினைவதுநலமே... ... ...(௬)

நலமென்நினைமின்னரகழுந்தாதே ... ... *
நிலமுனமிடந்தானீடுறைகோயில் ... ... *
மலமறுமதிசேர்மாலிருஞ்சோலை... ... ... *
வலமுறையெய்திமருவுதல்வலமே ... ... (௭)

வலஞ்செய்துவைகல்வலங்கழியாதே ... ... *
வலஞ்செய்யுமாயமாயவன்கோயில்... ... ... *
வலஞ்செய்யும்வானோர்மாலிருஞ்சோலை... ... ...*
வலஞ்செய்துநாளும்மருவுதல்வழக்கே ... ...அ)

வழக்கெனநினைமின்வல்வினைமூழ்கா ... ... *
அழக்கொடியட்டானமர்பெருங்கோயில் ... ... *
மழக்களிற்றினஞ்சேர்மாலிருஞ்சோலை ... ... *
தொழக்கருதுவதேதுணிவதுசூதே... ... ... (௯)

சூதென்றுகளவுஞ்சூதுஞ்செய்யாதே... ... ... *
வேதமுன்விரித்தான்விரும்பியகோயில்... ... ... *
மாதுறுமயில்சேர்மாலிருஞ்சோலைப்... ... ...*
போதவிழ்மலையேபுகுவதுபொருளே... ... ...(௰)

பொருளென்றிவ்வுலகம்படைத்தவன்புகழ்மேல்... ...*
மருளில்வண்குருகூர்வண்சடகோபன்... ... ... *
தெருள்கொள்ளச்சொன்னவோராயிரத்திப்பத் ... *
தருளுடையவன்றாளணைவிக்குமுடித்தே.....................(௰௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

கலிவிருத்தம்- பண்- பழந் தக்கராகம்.

ஒழிவில்காலமெல்லாமுடனாய்மன்னி...... ... ...*
வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்... ... ...*

தெழுகுரலருவித்திருவேங்கடத் *
தெழில்கொள்சோதியெந்தைதந்தைதந்தைக்கே (௧)

எந்தைதந்தைதந்தைதந்தைதந்தைக்கு *
முந்தைவானவர்வானவர்கோனொடுஞ் *
சிந்துபூமகிழுந்திருவேங்கடத் *
தந்தமில்புகழ்க்காரெழிலண்ணலே (௨)

அண்ணல்மாயனணிகொள்செந்தாமரைக் *
கண்ணன்செங்கனிவாய்க்கருமாணிக்கந் *
தெண்ணிறைச்சுனைநீர்த்திருவேங்கடத் *
தெண்ணில்தொல்புகழ்வானவரீசனே (௩)

ஈசன்வானவர்க்கென்பனென்றாலது *
தேசமோதிருவேங்கடத்தானுக்கு *
நீசனேனிறைவொன்றுமிலேனென்கட் *
பாசம்வைத்தபரஞ்சுடர்ச்சோதிக்கே (௪)

சோதியாகியெல்லாவுலகுந்தொழும் *
ஆதிமூர்த்தியென்றாலளவாகுமோ *
வேதியர்முழுவேதத்தமுதத்தைத் *
தீதில்சீர்த்திருவேங்கடத்தானையே (௫)

வேங்கடங்கள்மெய்ம்மேல்வினைமுற்றவுந் *
தாங்கடங்கட்குநல்லனவேசெய்வார் *
வேங்கடத்துறைவார்க்குநமோவெனல் *
ஆங்கடமையதுசுமந்தார்கட்கே (௬)

சுமந்துமாமலர்நீர்சுடர்தூபங்கொண் *
டமர்ந்துவானவர்வானவர்கோனொடுந் *
நமன்றெழுந்திருவேங்கடநங்கட்குச் *
சமன்கொள்வீடுதருந்தடங்குன்றமே (௭)

குன்றமேந்திக்குளிர்மழைகாத்தவன் *
அன்றுஞாலமளந்தபிரான்பரன் *
சென்றுசேர்திருவேங்கடமாமலை *
ஒன்றுமேதொழநம்வினையோயுமே (௮)

ஓயுமூப்புப்பிறப்பிறப்புப்பிணி *
வீயுமாறுசெய்வான்திருவேங்கடத் *

தாயதாண்மலராமடித்தாமரை... ... ...*
வாயுளுமனத்துள்ளும்வைப்பார்கட்கே ... ...(௯)

வைத்தநாள்வரையெல்லைகுறுகிச்சென் ... ...*
றெய்த்திளைப்பதன்முன்னமடைமினோ ... ...*
பைத்தபாம்பணையான்திருவேங்கட ... ... *
மொய்த்தசோலைமொய்பூந்தடந்தாழ்வரை ... ...(௰)

தாள்பரப்பிமண்டாவியவீசனை... ... ... *
நீள்பொழிற்குருகூர்ச்சடகோபன்சொற் ... ...*
கேழிலாயிரத்திப்பத்தும்வல்லவர் ... ...*
வாழ்வர்வாழ்வெய்திஞாலம்புகழவே ... .(௰௧)

ஆழ்வார்திருவடிகளே சரணம்,

———3*8———

அறுசீராசிரியவிருத்தம்-பண்-நட்டம்.

ஒன்றுந்தேவுமுலகுமுயிரும்மற்றும்யாதுமில்லா... ... ...*
அன்றுநான்முகன்றன்னொடுதேவருலகோடுயிர்படைத்தான் ... *
குன்றம்போன்மணிமாடநீடுதிருக்குருகூரதனுள் ... ...*
நின்றவாதிப்பிரானிற்கமற்றைத்தெய்வநாடுதிரே... ... ...(௧)

நாடிநீர்வணங்குந்தெய்வமுமும்மையுமுன்படைத்தான் ... ...*
வீடில்சீர்ப்புகழாதிப்பிரானவன்மேவியுறைகோயில் ... ... *
மாடமாளிகைசூழ்ந்தழகாயதிருக்குருகூரதனைப்... ... ... *
பாடியாடிப்பரவிச்சென்மின்கள்பல்லுலகீர்பரந்தே ... ...(௨)

பரந்ததெய்வமும்பல்லுலகும்படைத்தன்றுடனேவிழுங்கிக் ......*
கரந்துமிழ்ந்துகடந்திடந்ததுகண்டுந்தெளியகில்லீர்... .. ...*
சிரங்களாலமரர்வணங்குந்திருக்குருகூரதனுள் ... ...*
பரன்திறமன்றிப்பல்லுலகீர்தெய்வமற்றில்லைப்பேசுமினே.... ...(௩)

பேசநின்றசிவனுக்கும்பிரமன்றனக்கும்பிறர்க்கும்... ... . *
நாயகனவனேகபாலநன்மோக்கத்துக்கண்டுகொண்மின் ... ...*
தேசமாமதில்சூழ்ந்தழகாயதிருக்குருகூரதனுள் .... *
ஈசன்பாலோரவம்பறைதலென்னாவதிலிங்கியர்க்கே ... ...(௪)

இலிங்கத்திட்டபுராணத்திருஞ்சமணருஞ்சாக்கியரும் ... ...*
வலிந்துவாதுசெய்வீர்களுமற்றுநுந்தெய்வமுமாகிநின்றான் ....*
மலிந்துசெந்நெல்கவரிவீசுந்திருக்குருகூரதனுள் ... ...*
பொலிந்துநின்றபிரான்கண்டீரொன்றும்பொய்யில்லைபோற்றுமினே()

போற்றிமற்றோர்தெய்வம்பேணப்புறத்திட்டும்மையின்னே... ... *
தேற்றிவைத்ததெல்லீரும்வீடுபெற்றாலுலகில்லையென்றே... ... ... *
சேற்றிற்செந்நெல்கமலமோங்குதிருக்குருகூரதனுள்... ... *
ஆற்றவல்லவன்மாயன்கண்டீரதறிந்தறிந்தோடுமினே ... ... (௬)

ஓடியோடிப்பலபிறப்பும்பிறந்துமற்றோர்தெய்வம்... ... ... *
பாடியாடிப்பணிந்துபல்படிகால்வழியேறிக்கண்டீர் ... ... *
கூடிவானவரேத்தநின்றதிருக்குருகூரதனுள் ... ... *
ஆடுபுட்கொடியாதிமூர்த்திக்கடிமைபுகுவதே... ... ... (௭)

புக்கடிமையினாற்றன்னைக்கண்டமார்க்கண்டேயனவனை ... ... *
நக்கபிரானுமன்றுய்யக்கொண்டதுநாராயணனருளே... ... *
கொக்கலர்தடந்தாழைவேலித்திருக்குருகூரதனுள் ... ... *
மிக்கவாதிப்பிரானிற்கமற்றைத்தெய்வம்விளம்புதிரே ... ... (௮)

விளம்புமாறுசமயமுமவையாகியுமற்றுந்தன்பால்... ... *
அளந்துகாண்டற்கரியனாகியவாதிப்பிரானமரும்.... ... ... *
வளங்கொடண்பணைசூழ்ந்தழகாயதிருக்குருகூரதனை ... ... *
உளங்கொண்ஞானத்துவைம்மினும்மையுய்யக்கொண்டுபோகுறிலே (௯)

உறுவதாவதெத்தேவுமெவ்வுலகங்களுமற்றுந்தன்பால்... ... *
மறுவின்மூர்த்தியோடொத்தித்தனையுநின்றவண்ணநிற்கவே... ... *
செறுவிற்செந்நெல்கரும்போடோங்குதிருக்குருகூரதனுள் *
குறியமாணுருவாகியநீள்குடக்கூத்தனுக்காட்செய்வதே ... ... (௰)

ஆட்செய்தாழிப்பிரானைச்சேர்ந்தவன்வண்குருகூர்நகரான் ... ... *
நாட்கமழ்மகிழ்மாலைமார்பினன்மாறன்சடகோபன் ... ... *
வேட்கையாற்சொன்னபாடலாயிரத்துளிப்பத்தும்வல்லார் ... ... *
மீட்சியின்றிவைகுந்தமாநகர்மற்றதுகையதுவே ... ... (௰௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

அறுசீராசிரியவிருத்தம்-பண்-காந்தாரம்.

ஆராவமுதேயடியேனுடலநின்பாலன்பாயே ... ... *
நீராயலைந்துகரையவுருக்குகின்றநெடுமாலே ... ... *
சீரார்செந்நெற்கவரிவீசுஞ்செழுநீர்த்திருக்குடந்தை ... *
ஏரார்கோலந்திகழக்கிடந்தாய்கண்டேனெம்மானே... ... (௧)
எம்மானேயென்வெள்ளைமூர்த்தியென்னையாள்வானே... *
எம்மாவுருவும்வேண்டுமாற்றாலாவாயெழிலேறே... ... *

செம்மாகமலஞ்செழுநீர்மிசைக்கண்மலருந்திருக்குடந்தை *
அம்மாமலர்க்கண்வளர்கின்றானேயென்னான்செய்கேனே (௨)

என்னான்செய்கேன்யாரேகளைகண்ணென்னையென்செய்கின்றாய் *
உன்னாலல்லால்யாவராலுமொன்றுங்குறைவேண்டேன்...... *
கன்னார்மதில்சூழ்குடந்தைக்கிடந்தாயடியேனருவாணாள்... *
சென்னாளெந்நாளந்நாளுனதாள்பிடித்தேசெலக்காணே (௩)

செலக்காணுகிற்பார்காணுமளவுஞ்செல்லுங்கீர்த்தியாய் ... *
உலப்பிலானேயெல்லாவுலகுமுடையவொருமூர்த்தி... ... *
நலத்தால்மிக்கார்குடந்தைக்கிடந்தாயுன்னைக்காண்பானான் *
அலப்பாயாகாசத்தைநோக்கியழுவன்றொழுவேனே... ...(௪)

அழுவன்றொழுவனாடிக்காண்பன்பாடியலற்றுவன் ... *
தழுவல்வினையாற்பக்கநோக்கிநாணிக்கவிழ்ந்திருப்பன்... *
செழுவொண்பழனக்குடந்தைக்கிடந்தாய்செந்தாமரைக்கண்ணா *
தொழுவனேனையுனதாள்சேரும்வகையேசூழ்கண்டாய் (௫)

சூழ்கண்டாயென்றொல்லைவினையையறுத்துன்னடிசேரும் *
ஊழ்கண்டிருந்தேதூராக்குழிதூர்த்தெனைநாளகன்றிருப்பன் *
வாழ்தொல்புகழார்குடந்தைக்கிடந்தாய்வானோர்கோமானே *
யாழினிசையேயமுதேயறிவின்பயனேயரியேறே .... (௬)

அரியேறேயென்னம்பொற்சுடரேசெங்கட்கருமுகிலே ... *
எரியேபவளக்குன்றேநாற்றோளெந்தாயுனதருளே......... *
பிரியாவடிமையென்னைக்கொண்டாய்குடந்தைத்திருமாலே *
தரியேனினியுன்சரணந்தந்தென்சன்மங்களையாயே... ...(௭)

களையாய்துன்பங்களையாதொழிவாய்களைகண்மற்றிலேன் *
வளைவாய்நேமிப்படையாய்குடந்தைக்கிடந்தமாமாயா...... *
தளராவுடலமெனதாவிசரிந்துபோம்போது........... *
இளையாதுனதாளொருங்கப்பிடித்துப்போதவிசைநீயே (௮)

இசைவித்தென்னையுன்றாளிணைக்கீழிருத்துமம்மானே.. *
அசைவிலமரர்தலைவர்தலைவாவாதிப்பெருமூர்த்தி ..... *
திசைவில்வீசுஞ்செழுமாமணிகள்சேருந்திருக்குடந்தை... *
அசைவிலுலகம்பரவக்கிடந்தாய்காணவாராயே... ...(௯)

வாராயருவாய்வருமென்மாயாமாயாமூர்த்தியாய்... ... ... *
ஆராவமுதாயடியேனாவியகமேதித்திப்பாய்... ... ... *

தீராவினைகடீரவென்னையாண்டாய்திருக்குடந்தை ...... *
ஊராவுனக்காட்பட்டுமடியேனின்னமுழல்வேனோ ... (௰)
உழலையென்பிற்பேய்ச்சிமுலையூடவளையுயிருண்டான் ... *
கழல்களவையேசரணாகக்கொண்டகுருகூர்ச்சடகோபன் ... *
குழலின்மலியச்சொன்னவோராயிரத்துளிப்பத்தும் ... *
மழலைதீரவல்லார்காமர்மானேநோக்கியர்க்கே .... (௰௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆசிரியவிருத்தம்- பண் - பழம்பஞ்சரம்.

உலகமுண்டபெருவாயாவுலப்பில்கீர்த்தியம்மானே ... ... *
நிலவுஞ்சுடர்சூழொளிமூர்த்திநெடியாயடியேனாருயிரே ... ... *
திலதமுலகுக்காய்நின்றதிருவேங்கடத்தெம்பெருமானே ....*
குலதொல்லடியேனுன்பாதங்கூடுமாறுகூறாயே ... ...(௧)
கூறாய்நீறாய்நிலனாகிக்கொடுவல்லசுரர்குலமெல்லாஞ் ... ... *
சீறாவெறியுந்திருநேமிவலவாதெய்வக்கோமானே ... ... *
சேறார்சுனைத்தாமரைசெந்தீமலருந்திருவேங்கடத்தானே ... ... *
ஆறாவன்பிலடியேனுன்னடிசேர்வண்ணமருளாயே ... ... (௨)
வண்ணமருள்கொளணிமேகவண்ணாமாயவம்மானே ... ... *
எண்ணம்புகுந்துதித்திக்குமமுதேயிமையோரதிபதியே ... ... *
தெண்ணலருவிமணிபொன்முத்தலைக்குந்திருவேங்கடத்தானே ... *
அண்ணலேயுன்னடிசேரவடியேற்காவாவென்னாயே... ... ... (௩)
ஆவாவென்னாதுலகத்தையலைக்குமசுரர்வாணாண்மேல்... ... ... *
தீவாய்வாளிமழைபொழிந்தசிலையாதிருமாமகள்கேள்வா ... *
தேவாசுரர்கண்முனிக்கணங்கள்விரும்புந்திருவேங்கடத்தானே ... ...*
பூவார்கழல்களருவினையேன்பொருந்துமாறுபுணராயே ... ... (௪)
புணராநின்றமரமேழன்றெய்தவொருவில்வலவாவோ ... ... *
புணரேய்நின்றமரமிரண்டினடுவேபோனமுதல்வாவோ... ... ...*
திணரார்மேகமெனக்களிறுசேருந்திருவேங்கடத்தானே ... *
திணரார்சார்ங்கத்துன்பாதஞ்சேர்வதடியேனெந்நாளே... ... (௫)
எந்நாளேநாமண்ணளந்தவிணைத்தாமரைகள்காண்பதற்கென் ... *
றெந்நாளுநின்றிமையோர்களேத்தியிறைஞ்சியினமினமாய் ... ...*

மெய்நாமனத்தால்வழிபாடுசெய்யுந்திருவேங்கடத்தானே ... ... *
மெய்நானெய்தியெந்நாளுன்னடிக்கீழடியேன்மேவுவதே ... ...(௬)
அடியேன்மேவியமர்கின்றவமுதேயிமையோரதிபதியே ... ... *
கொடியாவடுபுள்ளுடையானேகோலக்கனிவாய்ப்பெருமானே ... *
செடியார்வினைகடீர்மருந்தேதிருவேங்கடத்தெம்பெருமானே... ..*
நொடியார்பொழுதுமுன்பாதங்காணநோலாதாற்றேனே... ... (௭)
நோலாதாற்றேனுன்பாதங்காணவென்றுநுண்ணுணர்வில் ... *
நீலார்கண்டத்தம்மானுநிறைநான்முகனுமிந்திரனுஞ் ... ... *
சேலேய்கண்ணார்பலர்சூழவிரும்புந்திருவேங்கடத்தானே ... ...*
மாலாய்மயக்கியடியேன்பால்வந்தாய்போலேவாராயே ... ... (௮)
வந்தாய்போலேவாராதாய்வாராதாய்போல்வருவானே... ... ... *
செந்தாமரைக்கட்செங்கனிவாய்நாற்றோளமுதேயெனதுயிரே... ... *
சிந்தாமணிகள்பகரல்லைப்பகல்செய்திருவேங்கடத்தானே... ... ...*
அந்தோவடியேனுன்பாதமகலகில்லேனிறையுமே ... ... (௯)
அகலகில்லேனிறையுமென்றலர்மேன்மங்கையுறைமார்பா ... *
நிகரிற்புகழாயுலகமூன்றுடையாயென்னையாள்வானே ... ...*
நிகரிலமரர்முனிக்கணங்கள்விரும்புந்திருவேங்கடத்தானே ... *
புகலொன்றில்லாவடியேனுன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே... ... ...(௰)
அடிக்கீழமர்ந்துபுகுந்தடியீர்வாழ்மினென்றென்றருள்கொடுக்கும் ...*
படிக்கேழில்லாப்பெருமானைப்பழனக்குருகூர்ச்சடகோபன் ... *
முடிப்பான்சொன்னவாயிரத்துத்திருவேங்கடத்துக்கிவைபத்தும்... ...*
படித்தார்பிடித்தார்வீற்றிருந்துபெரியவானுண்ணிலாவுவரே...... (௰௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆசிரியவிருத்தம் - பண் - தக்கராகம்,

கங்குலும்பகலுங்கண்டுயிலறியாள்கண்ணநீர்கைகளாலிறைக்குஞ் ... ...*
சங்குசக்கரங்களென்றுகைகூப்புந்தாமரைக்கண்ணென்றேதளரும் ...*
எங்ஙனேதரிக்கேனுன்னைவிட்டென்னுமிருநிலங்கைதுழாவிருக்குஞ் ...*
செங்கயல்பாய்நீர்த்திருவரங்கத்தாயிவடிறத்தென்செய்கின்றாயே .. (௧)
என்செய்கின்றாயென்றாமரைக்கண்ணாவென்னுங்கணீர்மல்கவிருக்கும் *
என்செய்கேனெறிநீர்த்திருவரங்கத்தாவென்னும்வெவ்வுயிர்த் துயிர்த்து
ருகு, முன்செய்தவினையேமுகப்படாவென்னுமுகில்வண்ணாதகவதோவெ
ன்னு, முன்செய்திவ்வுலகமுண்டுமிழ்ந்தளந்தாயென்கொலோமுடிகின்ற
திவட்கே ... ...(௨)

வட்கிலளிறையுமணிவண்ணாவென்னும்வானமேநோக்குமையாக்கும் ...*
உட்குடையசுரருயிரெல்லாமுண்டவொருவனேயென்னுமுள்ளுருகும்...*
கட்கிலீயுன்னைக்காணுமாறருளாய்காகுத்தாகண்ணனேயென்னுந் ... ...*
திட்கொடிமதில்சூழ்திருவரங்கத்தாயிவடிறத்தென்செய்திட்டாயே ...(௫)

இட்டகாலிட்டகைகளாயிருக்கு மெழுந்துலாய்மயங்குங்கைகூப்புங்.....*
கட்டமேகாதலென்றுமூர்ச்சிக்குங்கடல்வண்ணாகடியைகாணென்னும்...*
வட்டவாய்நேமிவலங்கையாவென்னும்வந்திடாயென்றென்றேமயங்குஞ்*
சிட்டனேசெழுநீர்த்திருவரங்கத்தாயிவடிறத்தென்சிந்தித்தாயே......(௬)

சிந்திக்குந்திசைக்குந்தேறுங்கைகூப்புந்திருவரங்கத்துள்ளாயென்னும் *
வந்திக்குமாங்கேமழைக்கணீர்மல்கவந்திடாயென்றென்றேமயக்கும் ...*
அந்திப்போதவுணனுடலிடந்தானேயலைகடல்கடைந்தவாரமுதே ... ...*
சந்தித்துன்சரணஞ்சார்வதேவலித்ததையலைமையல்செய்தானே... ([illegible])

மையல்செய்தென்னை மனங்கவர்ந்தானேயென்னுமாமாயனேயென்னுஞ் *
செய்யவாய்மணியேயென்னுந்தண்புனல்சூழ்திருவரங்கத்துள்ளாயென்னு
வெய்யவாடண்டுசங்குசக்கரம்வில்லேந்தும்விண்ணோர்முதலென்னும் [ம்
பைகொள்பாம்பணையாயிவடிறத்தருளாய்பாவியேன்செய்யற்பாலதுவே

பாலதுன் பங்களின்பங்கள்படைத்தாய்பற்றிலார் பற்றநின்றானே......*
காலசக்கரத்தாயுகவிடங்கொண்டகடல்வண்ணாகண்ணனேயென்னும் ...*
சேல்கொடண்பணைசூழ்திருவரங்கத்தாயென்னுமென் தீர்த்தனே யென்னு
ங், கோலமாமழைக்கண்பனிமல்கவிருக்கு மென்னுடைக் கோமளக்கொ
ழுந்தே ... ... (௭)

கொழுந் துவானவர்கட்கென்னுங்குன்றேந்திக்கோனிரைகாத்தவனென்
னும், அழுந்தொழுமாவியனலவெவ்வுயிர்க்குமஞ்சனவண்ணனே யென்
னும் எழுந்துமேலேநோக்கியிமைப்பிலளிருக்குமெங்ஙனேநோக்குகேனெ
ன்னுஞ், செழுந்தடம்புனல்சூழ் திருவரங்கத் தாயென்செய்கேனென்றி
ருமகட்கே .... (௮)

என்றிருமகள்சேர்மார்வனேயென்னுமென்னுடையாவியேயென்னும் *
நின்றிருவெயிற்றாலிடந்துநீகொண்டநிலமகள்கேள்வனேயென்னும் ...*
அன்றுருவேழுந்தழுவிநீகொண்டவாய்மகணன்பனேயென்னுந்... ...*
தென்றிருவரங்கங்கோயில்கொண்டானேதெளிகிலேன்முடிவிவடனக்கே(

முடிவிவடனக்கொன்றறிகிலேனென்னுமேழுவுலகாளியேயென்னும்... ...*
கடிகமழ்கொன்றைச்சடையனேயென்னுநான்முகக்கடவுளேயென்னும்*
வடிவுடைவானோர்தலைவனேயென்னும்வண்டிருவரங்கனேயென்னும் *
அடியடையாதாள்போலிவளணுகியடைந்தனண்முகில்வண்ணனடியே(௯)

முகில்வண்ணனடியையடைந்தருள்சூடியுய்ந்தவன்மொய்புனற்பொருநல், துகில்வண்ணத்தூநீர்ச்சேர்ப்பன்வண்பொழில்சூழ்வண்குருகூர்ச்சடகோபன், முகில்வண்ணனடிமேற்சொன்னசொன்மாலையாயிரத் திப்பத்தும்வல்லார் - முகில்வண்ணவானத்திமையவர்சூழவிருப்பர் பேரின்பவெள்ளத்தே ... ... (௰௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆசிரியவிருத்தம் - பண் - தக்கேசி.

நெடுமாற்கடிமைசெய்வேன்போலவனைக்கருதவஞ்சித்துத்... ... .*
தடுமாற்றற்றதீக்கதிகண்முற்றுந்தவிர்ந்தசதிர்நினைந்தால்..................*
கொடுமாவினையேனவனடியாரடியேகூடுமிதுவல்லால்........... ......*
விடுமாறென்பதென்னந்தோவியன்மூவுலகுபெறினுமே.......... ...(௧)

வியன்மூவுலகுபெறினும்போய்த்தானேதானேயானாலும்......... ......*
புயன்மேகம்போற்றிருமேனியம்மான்புனைபூங்கழலடிக்கீழ்ச்...... ......*
சயமேயடிமைதலைநின்றார்திருத்தாள்வணங்கியிம்மையே...... ......*
பயனேயின்பம்யான்பெற்றதுறுமோபாவியேனுக்கே........... ......(௨)

உறுமோபாவியேனுக்கிவ்வுலகமூன்றுமுடனிறையச்............... ...*
சிறுமாமேனிநிமிர்த்தவென்செந்தாமரைக்கட்டிருக்குறளன்......... ..*
நறுமாவிரைநான்மலரடிக்கீழ்ப்புகுதலன்றியவனடியார்......... ......*
சிறுமாமனிசராயென்னையாண்டாரிங்கேதிரியவே.................. ...(௩)

இங்கேதிரிந்தேற்கிழுக்குற்றென்னிருமாநிலமுன்னுண்டுமிழ்ந்த... ......*
செங்கோலத்தபவளவாய்ச்செந்தாமரைக்கண்ணென்னம்மான்.. ......*
பொங்கேழ்புகழ்கள்வாயவாய்ப்புலன்கொள்வடிவென்மனத்ததாய்......*
அங்கேமலர்கள்கையவாய்வழிபட்டோடவருளிலே..................(௪)

வழிபட்டோடவருள்பெற்றுமாயன்கோலமலரடிக்கீழ்ச்.......... ...*
சுழிபட்டோடுஞ்சுடர்ச்சோதிவெள்ளத்தின்புற்றிருந்தாலும்..............*
இழிபட்டோடுமுடலினிற்பிறந்துதன்சீர்யான்கற்றும்......... ....*
மொழிபட்டோடுங்கவியமுதநுகர்ச்சியுறுமோமுழுதுமே..............(௫)

நுகர்ச்சியுறுமோமூவுலகின்வீடுபேறுதன்கேழில்.........................*
புகர்ச்செம்முகத்தகளிறட்டபொன்னாழிக்கையென்னம்மான்... ... ...*
நிகர்ச்சம்பங்கியெரிவிழிகணீண்டவசுரருயிரெல்லாந்............ ......*
தகர்த்துண்டுழலும்புட்பாகன்பெரியதனிமாப்புகழே......... ... ...(௬)

தனிமாப்புகழேயெஞ்ஞான்று நிற்கும்படியாய்த்தான்றோன்றி ... ... *
முனிமாப்பிரமமுதல்வித்தாயுலகமூன்றுமுளைப்பித்த ... ... *
தனிமாத்தெய்வத்தளிரடிக்கீழ்ப்புகுதலன்றியவனடியார் ... ... *
நனிமாக்கலவியின்பமேநாளும்வாய்க்கநங்கட்கே ... ... (௭)

நாளும்வாய்க்கநங்கட்குநளிநீர்க்கடலைப்படைத்துத்தன் ... ... *
தாளுந்தோளுமுடிகளுஞ்சமனிலாதபலபரப்பி ... ... *
நீளும்படர்பூங்கற்பகக்காவுநிறைபொன்னாயிற்றின் ... ... *
கோளுமுடையமணிமலைபோற்கிடந்தான்றமர்கள்கூட்டமே ... (௮)

தமர்கள்கூட்டவல்வினையைநாசஞ்செய்யுஞ்சதிர்மூர்த்தி ... ... *
அமர்கொளாழிசங்குவாள்விற்றண்டாதிபல்படையன் ... ... *
குமரன்கோலவைங்கணைவேடாதைகோதிலடியார்தந் ... ... *
தமர்கடமர்கடமர்களாஞ்சதிரோவாய்க்கத்தமியேற்கே .. .. (௯)

வாய்க்கத்தமியேற்கூழிதோறூழியூழிமாகாயம் ... ... *
பூக்கொண்மேனிநான்குதோட்பொன்னாழிக்கையென்னம்மான் ... *
நீக்கமில்லாவடியார்தம்மடியாரடியாரடியாரெங் ... ... *
கோக்களவர்க்கேகுடிகளாய்ச்செல்லுநல்லகோட்பாடே ... (௰)

நல்லகோட்பாடுலகங்கண்மூன்றினுள்ளுந்தானிறைந்த ... ... *
அல்லிக்கமலக்கண்ணனையந்தண்குருகூர்ச்சடகோபன் ... ... *
சொல்லப்பட்டவாயிரத்துளிவையும்பத்தும்வல்லார்கள் ... ... *
நல்லபதத்தான்மனைவாழ்வர்கொண்டபெண்டிர்மக்களே ... ... (௰௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்,

கலிவிருத்தம்-பண்-நட்டபாஷை,

மாலைநண்ணித்தொழுதெழுமினோவினைகெடக் ... ... *
காலைமாலைகமலமலரிட்டுநீர் ... ... *
வேலைமோதுமதில்சூழ்திருக்கண்ணபுரத் ... ... *
தாலின்மேலாலமர்ந்தானடியிணைகளே .. .. (௧)

கள்ளவிழுமலரிட்டுநீரிறைஞ்சுமின் ... ... *
நள்ளிசேரும்வயல்சூழ்கிடங்கின்புடை ... ... *
வெள்ளியேய்ந்தமதில்சூழ்திருக்கண்ணபுரம் ... ... *
உள்ளிநாளுந்தொழுதெழுமினோதொண்டரே ... ... (௨)

தொண்டர்நுந்தந்துயர்போகநீரேகமாய் ... ... *
விண்டுவாடாமலரிட்டுநீரிறைஞ்சுமின் ... ... *

வண்டுபாடும்பொழில்சூழ்திருக்கண்ணபுரத் ... ... *
தண்டவாணனமரர்பெருமானையே... ... ... (௩)

மானைநோக்கிமடப்பின்னைதன்கேள்வனைத்... ... ... *
தேனைவாடாமலரிட்டுநீரிறைஞ்சுமின்... ... ... *
வானையுந்துமதில்சூழ்திருக்கண்ணபுரந் .. .. *
தானையந்தபெருமான்சரணாகுமே... ... ... (௪)

சரணமாகுந்தனதாளடைந்தார்க்கெல்லாம் ... ... *
மரணமானால்வைகுந்தங்கொடுக்கும்பிரான் ... ... *
அரணமைந்தமதில்சூழ்திருக்கண்ணபுரத்... ... ... *
தரணியாளன்றனதன்பர்க்கன்பாகுமே ... ... (௫)

அன்பனாகுந்தனதாளடைந்தார்க்கெல்லாஞ்... ... ... *
செம்பொனாகத்தவுணனுடல்கீண்டவன்... ... ... *
தன்பொன்னேய்ந்தமதில்சூழ்திருக்கண்ணபுரத்... ... *
தன்பனாளுந்தன்மெய்யர்க்குமெய்யனே... ... ... (௬)

மெய்யனாகும்விரும்பித்தொழுவார்க்கெல்லாம்... ... ... *
பொய்யனாகும்புறமேதொழுவார்க்கெல்லாஞ்... ... ... *
செய்யில்வாளையுகளுந்திருக்கண்ணபுரத்... ... ... *
தையனாகத்தணைப்பார்கட்கணியனே... ... ... (௭)

அணியனாகுந்தனதாளடைந்தார்க்கெல்லாம்... ... ... *
பிணியுஞ்சாராப்பிறவிகெடுத்தாளும்... ... ... *
மணிபொன்னேய்ந்தமதில்சூழ்திருக்கண்ணபுரம்... ... ... *
பணிமினாளும்பரமேட்டிதன்பாதமே... ... ... (௮)

பாதநாளும்பணியத்தணியும்பிணீ... ... ... *
ஏதஞ்சாராவெனக்கேலினியென்குறை... ... ... *
வேதநாவர்விரும்புந்திருக்கண்ணபுரத் ... ... *
தாதியானையடைந்தார்க்கல்லலில்லையே... ... ... (௯)

இல்லையல்லலெனக்கேலினியென்குறை ... ... *
அல்விமாதரமருந்திருமார்பினன்... ... ... *
கல்விலேய்ந் தமதிள்சூழ்திருக்கண்ணபுரஞ்... ... ... *
செல்லநாளுந்துயர்பாடுசாரவே... ... ... (௰)

பாடுசாராவினைபற்றறவேண்டுவீர் ... ... *
மாடநீடுகுருகூர்ச்சடகோபன்சொல்... ... ... *

பாடலானதமிழாயிரத்துளிப்பத்தும் ... ... *
பாடியாடிப்பணிமினவன்றாள்களையே ... ... (௰௧)

ஆழ்வார்திருவடிகளே சரணம்,

கலிவிருத்தம்-பண்-கொல்லி

சூழ்விசும்பணிமுகிற்றூரியமுழக்கின ... ... *
வாழ்கடலலைதிரைகையெடுத்தாடின ... ... *
ஏழ்பொழிலும்வளமேந்தியவென்னப்பன் ... *
வாழ்புகழ்நாரணன்றமரைக்கண்டுகந்தே ... ... (௧)

நாரணன்றமரைக்கண்டுகந்துநன்னீர்முகில் ... ... *
பூரணபொற்குடம்பூரித்ததுயர்விண்ணில் ... ... *
நீரணிகடல்கணின்றார்த்தனநெடுவரைத் ... ... *
தோரணநிரைத்தெங்குந்தொழுதனருலகே ... ... (௨)

தொழுதனருலகர்கடூபநன்மலர்மழைப் ... ... *
பொழிவனர்பூமியன்றளந்தவன்றமர்முன்னே ... *
எழுமினென்றிருமருங்கிசைத்தனர்முனிவர்கள் ... ... *
வழியிதுவைகுந்தற்கென்றுவந்தெதிரே ... ... (௩)

எதிரெதிரிமையவரிருப்பிடம்வகுத்தனர் ... ... *
கதிரவரவரவர்கைந்நிரைகாட்டினர் ... ... *
அதிர்குரன்முரசங்களலைகடன்முழக்கொத்த ... ... *
மதுவிரிதுழாய்முடிமாதவன்றமர்க்கே ... ... (௪)

மாதவன்றமரென்றுவாசலில்வானவர் ... ... *
போதுமினெமதிடம்புகுதுகவென்றலும் ... ... *
கீதங்கள்பாடினர்கின்னரர்கருடர்கள் ... ... *
வேதநல்வாயவர்வேள்வியுண்மடுத்தே ... ... (௫)

வேள்வியுண்மடுத்தலும்விரைகமழ்நறும்புகை ... ... *
காளங்கள்வலம்புரிகலந்தெங்குமிசைத்தனர் ... ... *
ஆண்மின்கள்வானகமாழியான்றமரென்று ... ... *
வாளொண்கண்மடந்தையர்வாழ்த்தினர்மகிழ்ந்தே ... (௬)

மடந்தையர்வாழ்த்தலும்மருதரும்வசுக்களும் ... ... *
தொடர்ந்தெங்குந்தோத்திரஞ்சொல்லினர்தொடுகடல் ... *
கிடந்தவெங்கேசவன்கிளரொளிமணிமுடிக் ... ... *
குடந்தையெங்கோவலன்குடியடியார்க்கே ... (௭)

குடியடியாரிவர்கோவிந்தன்றனக்கென்று ... ... *
முடியுடைவானவர்முறைமுறையெதிர்கொளக் ... ... *
கொடியணிநெடுமதிட்கோபுரங்குறுகினர் ... ... *
வடிவுடைமாதவன்வைகுந்தம்புகவே ... ... (அ)

வைகுந்தம்புகுதலும்வாசலில்வானவர் ... ... *
வைகுந்தன்றமரெமரெமடம்புகவென்று ... ... *
வைகுந்தத்தமரருமுனிவரும்வியந்தனர் ... ... *
வைகுந்தம்புகுவதுமண்ணவர்விதியே ... ... (௯)

விதிவகைபுகுந்தனரென்றுநல்வேதியர் ... *
பதியினிற்பாங்கினிற்பாதங்கள்கழுவினர் ... ... *
நிதியுநற்சுண்ணமுநிறைகுடவிளக்கமும் ... ... *
மதிமுகமடந்தையரேந்தினர்வந்தே ... ... (௰)

வந்தவரெதிர்கொள்ளமாமணிமண்டபத் ... ... *
தந்தமில்பேரின்பத்தடியரோடிருந்தமை ... ... *
கொந்தலர்பொழிற்குருகூர்ச்சடகோபன்சொல் ... ... *
சந்தங்களாயிரத்திவைவல்லார்முனிவரே ... ... (௰௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்;

கலித்துறை-பண்-பஞ்சமம்.

முனியேநான்முகனேமுக்கண்ணப்பாவென்பொல்லாக் ... ... *
கனிவாய்த்தாமரைக்கட்கருமாணிக்கமேயென்கள்வா ... ... *
தனியேனாருயிரேயென்றலைமிசையாய்வந்திட் ... ... *
டினிநான்போகலொட்டேனொன்றுமாயஞ்செய்யேலென்னையே ...... (௧)

மாயஞ்செய்யேலென்னையுன்றிருமார்பத்துமாலைநங்கை ... ... *
வாசஞ்செய்பூங்குழலாடிருவாணைநின்னாணைகண்டாய் .. ... *
நேசஞ்செய்துன்னோடென்னையுயிர்வேறின்றியொன்றாகவே ... *
கூசஞ்செய்யாதுகொண்டாயென்னைக்கூவிக்கொள்ளாய்வந்தந்தோ ...(௨)

கூவிக்கொள்ளாய்வந்தந்தோவென்பொல்லாக்கருமாணிக்கமே ... ... *
ஆவிக்கோர்பற்றுக்கொம்புநின்னலாலறிகின்றிலேனான் ... ... *
மேவித்தொழும்பிரமன்சிவனிந்திரனாதிக்கெல்லாந் ... ... *
நாபிக்கமலமுதற்கிழங்கேயும்பரந்ததுவே ... ... (௩)

உம்பரந்தண்பாழேயோவதனுண்மிசைநீயேயோ ... ... *
அம்பரநற்சோதியதனுட்பிரமனரனீ .... *

உம்பரும்யாவரும்படைத்தமுனிவனவனீ ... *
உம்பரஞ்சாதிக்கலுற்றென்னைப்போரவிட்டிட்டாயே... (௪)

போரவிட்டிட்டென்னைநீபுறம்போக்கலுற்றாற்பின்னையான் ... *
ஆரைக்கொண்டெத்தையந்தோவெனதென்பதென்யானென்பதென் ... *
தீரவிரும்புண்டநீரதுபோலவென்னாருயிரை ... *
ஆரப்பருகவெனக்காராவமுதானாயே ... (௫)

எனக்காராவமுதாயெனதாவியையின்னுயிரை ... *
மனக்காராமைமன்னியுண்டிட்டாயினியுண்டொழியாய் ... *
புனக்காயாநிறத்தபுண்டரீகக்கட்செங்கனிவாய் ... *
உனக்கேற்குங்கோலமலர்ப்பாவைக்கன்பாகியவென்னன்பேயோ... (௬)

கோலமலர்ப்பாவைக்கன்பாகியவென்னன்பேயோ... *
நீலவரையிரண்டுபிறைகவ்விநிமிர்ந்ததொப்பக்... *
கோலவராகமொன்றாய்நிலங்கோட்டிடைக்கொண்டவெந்தாய்... *
நீலக்கடல்கடைந்தாயுன்னைப்பெற்றினிப்போக்குவனே ... (௭)

பெற்றினிப்போக்குவனோவுன்னையென்றனிப்பேருயிரை... *
உற்றவிருவினையாயுயிராய்ப்பயனாயவையாய்... *
முற்றவிம்மூவுலகும்பெருந்தூறாய்த்தூற்றிற்புக்கு... *
முற்றக்கரந்தொளித்தாயென்முதற்றனிவித்தேயோ ... (௮)

முதற்றனிவித்தேயோமுழுமூவுலகாதிக்கெல்லாம் ... *
முதற்றனியுன்னையுன்னையெந்நாள்வந்துகூடுவன்யான் ... *
முதற்றனியங்குமிங்குமுழுமுற்றுறுவாழ்பாழாய் ... *
முதற்றனிசூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்தமுடிவிலீயோ... (௯)

சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்தமுடிவில்பெரும்பாழேயோ ... *
சூழ்ந்ததனிற்பெரியபரநன்மலர்ச்சோதீயோ... *
சூழ்ந்ததனிற்பெரியசுடர்ஞானவின்பமேயோ... *
சூழ்ந்ததனிற்பெரியவென்னவாவறச்சூழ்ந்தாயே ... (௰)

அவாவறச்சூழரியையயனையரனையலற்றி ... *
அவாவற்றுவீடுபெற்றகுருகூர்ச்சடகோபன்சொன்ன ... *
அவாவிலந்தாதிகளாலிவையாயிரமுமுடிந்த... *
அவாவிலந்தாதியிப்பத்தறிந்தார்பிறந்தாருயர்ந்தே... (௰௧)

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

திருவரங்கத்தமுதனார்

அருளிய, காயத்திரிஸாரமாகிய

இராமாநுஜநூற்றந்தாதி.

தனியன்,

(நேரிசைவெண்பா.)

முன்னைவினையகலமூங்கிற்குடியமுதன் … *
பொன்னங்கழற்கமலப்போதிரண்டும் - என்னுடைய … *
சென்னிக்கணியாகச்சேர்த்தினேன்றென்புலத்தார்க் … *
கென்னிற்கடைவுடையேன்யான் … *

(கட்டளைக்கலித்துறை)

நயந்தருபேரின்பமெல்லாம்பழுதென்றுநண்ணினர்பால் … *
சயந்தருகீர்த்தியிராமாநுஜமுனிதாளிணைமேல் … *
உயர்ந்தகுணத்துத்திருவரங்கத்தமுதோங்குமன்பால் … *
இயம்புகலித்துறையந்தாதியோதவிசைநெஞ்சமே … *

சொல்லுந்தொகைகொண்டுனதடிப்போதுக்குத்தொண்டுசெய்யும் … *
நல்லன்பரேத்துமுன்னாமமெல்லாமென்றனாவினுள்ளே … *
அல்லும்பகலுமமரும்படிநல்லறுசமயம் … *
வெல்லும்பரமவிராமாநுஜவிதென்விண்ணப்பமே … *

பூமன்னுமாதுபொருந்தியமார்பன்புகழ்மலிந்த … *
பாமன்னுமாறனடிபணிந்துய்ந்தவன்பல்கலையோர் … *
தாமன்னவந்தவிராமாநுஜன்சரணாரவிந்தம் … *
நாமன்னிவாழநெஞ்சேசொல்லுவோமவனாமங்களே …(க)

கள்ளார்பொழிற்றென்னரங்கன்கமலபதங்கணெஞ்சிற் … *
கொள்ளாமனிதரைநீக்கிக்குறையிற்பிரானடிக்கீழ் … *
விள்ளாதவன்பனிராமாநுஜன்மிக்கசீலமல்லால் … *
உள்ளாதென்னெஞ்சொன்றறியேனெனக்குற்றபேரியல்வே …(உ)

பேரியனெஞ்சேயடிபணிந்தேனுன்னைப்பேய்ப்பிறவிப் … *
பூரியரோடுள்ளசுற்றம்புலர்த்திப்பொருவருஞ்சீர் … *

ஆரியன்செம்மையிராமாநுஜமுனிக்கன்புசெய்யும் *
சீரியபேருடையாரடிக்கீழென்னைச்சேர்த்ததற்கே (௩)

என்னைப்புவியிலொருபொருளாக்கிமருள்சுரந்த *
முன்னைப்பழவினைவேரறுத்தூழிமுதல்வனையே *
பன்னப்பணித்தவிராமாநுஜன்பரன்பாதமுமென் *
சென்னித்தரிக்கவைத்தானெனக்கேதுஞ்சிதைவில்லையே (௪)

எனக்குற்றசெல்வமிராமாநுஜனென்றிசையகில்லா *
மனக்குற்றமாந்தர்பழிக்கிற்புகழ்வன்மன்னியசீர் *
தனக்குற்றவன்பனவன்றிருநாமங்கள்சாற்றுமன்பர் *
இனக்குற்றங்காணகில்லார்பற்றியேய்ந்தவியல்பிதன்றே (௫)

இயலும்பொருளுமிசையத்தொடுத்தீன்கவிகளன்பால் *
மயல்கொண்டுவாழ்த்துமிராமாநுஜனைமதியின்மையால் *
பயிலுங்கவிகளிற்பத்தியில்லாதவென்பாவிநெஞ்சால் *
முயல்கின்றனனவன்றன்பெருங்கீர்த்திமொழிந்திடவே (௬)

மொழியைக்கடக்கும்பெரும்புகழான்வஞ்சமுக்குறும்பாங் *
குழியைக்கடக்குநங்கூரத்தாழ்வான்சரண்கூடியபின் *
பழியைக்கடத்துமிராமாநுஜன்புகழ்பாடியல்லா *
வழியைக்கடத்தலெனக்கினியாதும்வருத்தமன்றே (௭)

வருத்தும்புறவிருண்மாற்றவெம்பொய்கைப்பிரான்மறையின் *
குருத்தின்பொருளையுஞ்செந்தமிழ்தன்னையுங்கூட்டியொன்றத் *
திரித்தன்றெரித்ததிருவிளக்கைத்தன்றிருவுள்ளத்தே *
இருத்தும்பரமனிராமாநுஜனெம்மிறையவனே (௮)

இறைவனைக்காணுமிதயத்திருள்கெடஞானமென்னும் *
நிறைவிளக்கேற்றியபூதத்திருவடித்தாள்கணெஞ்சத் *
துறையவைத்தாளுமிராமாநுஜன்புகழோதுநல்லோர் *
மறையினைக்காத்திந்தமண்ணகத்தேமன்னவைப்பவரே (௯)

மன்னியபேரிருண்மாண்டபின்கோவலுண்மாமலராள் *
தன்னொடுமாயனைக்கண்டமைகாட்டுந்தமிழ்த்தலைவன் *
பொன்னடிபோற்றுமிராமாநுஜற்கன்புபூண்டவர்தாள் *
சென்னியிற்சூடுந்திருவுடையாரென்றுஞ்சீரியரே (௰)

சீரியநான்மறைச்செம்பொருட்செந்தமிழாலளித்த *
பாரியலும்புகழ்ப்பாண்பெருமாள்சரணாம்பதுமத் *

தாரியல்சென்னிஇராமாநுஜன்றன்னைச்சார்ந்தவர்தம் ... ... *
காரியவண்மையென்னாற்சொல்லொணாதிக்கடலிடத்தே ... (௰௧)

இடங்கொண்டகீர்த்திமழிசைக்கிறைவனிணையடிப்போ ... ... *
தடங்குமிதயத்திராமாநுஜனம்பொற்பாதமென்னுங் ... ... *
கடங்கொண்டிறைஞ்சுந்திருமுனிவர்க்கன்றிக்காதல்செய்யாத் ... *
திடங்கொண்டஞானியர்க்கேயடியேனன்புசெய்வதுவே ... (௰௨)

செய்யும்பசுந்துளவத்தொழின்மாலையுஞ்செந்தமிழிற் ... ... *
பெய்யுமறைத்தமிழ்மாலையும்பேராதசீரரங்கத் ... ... *
தையன்கழற்கணியும்பரன்றாளன்றியாதரியா ... ... *
மெய்யனிராமாநுஜன்சரணேகதிவேறெனக்கே ... ... (௰௩)

கதிக்குப்பதறிவெங்கானமுங்கல்லுங்கடலுமெல்லாங் ... ... *
கொதிக்கத்தவஞ்செய்யுங்கொள்கையற்றேன்கொல்லிகாவலன்சொற் ... *
பதிக்குங்கலைக்கவிபாடும்பெரியவர்பாதங்களே ... ... *
துதிக்கும்பரமனிராமாநுஜனென்னைச்சோர்விலனே ... (௰௪)

சோராதகாதற்பெருஞ்சுழிப்பாற்றொல்லைமாலையொன்றும் ... *
பாராதவனைப்பல்லாண்டென்றுகாப்பிடும்பான்மையன்றாள் ... *
பேராதவுள்ளத்திராமாநுஜன்றன்பிறங்கியசீர் ... ... *
சாராமனிசரைச்சேரேனெனக்கென்னதாழ்வினியே ... (௰௫)

தாழ்வொன்றில்லாமறைதாழ்ந்துதலமுழுதுங்கலியே ... ... *
ஆள்கின்றநாள்வந்தளித்தவன்காண்மினரங்கர்மௌலி ... ... *
சூழ்கின்றமாலையைச்சூடிக்கொடுத்தவடொல்லருளால் ... ... *
வாழ்கின்றவள்ளலிராமாநுஜனென்னுமாமுனியே ... ... (௰௬)

முனியார்துயரங்கண்முந்திலுமின்பங்கண்மொய்த்திடினுங் ... *
கனியார்மனங்கண்ணமங்கைநின்றானைக்கலைபரவுந் ... *
தனியானையைத்தண்டமிழ்நூல்செய்தநீலன்றனக்குலகில் ... *
இனியானையெங்களிராமாநுஜனைவந்தெய்தினரே ... ... (௰௭)

எய்தற்கரியமறைகளையாயிரமின்றமிழால் ... ... *
செய்தற்குலகில்வருஞ்சடகோபனைச்சிந்தையுள்ளே ... ... *
பெய்தற்கிசையும்பெரியவர்சீரையுயிர்களெல்லாம் ... ... *
உய்தற்குதவுமிராமாநுஜனெம்முறுதுணையே ... ... (௰௮)

உறுபெருஞ்செல்வமுந்தந்தையுந்தாயுமுயர்குருவும் ... ... *
வெறிதருபூமகணாதனுமாறன்விளங்கியசீர் ... ... *

நெறிதருஞ்செந்தமிழாரணமேயென்றுநீணிலத்தோர் ... *
அறிதரநின்றவிராமாநுசனெனக்காரமுதே ... ... (௰௯)

ஆரப்பொழிற்றென்குருகைப்பிரானமுதத்திருவாய் ... ... *
ஈரத்தமிழினிசையுணர்ந்தோர்கட்கினியவர்தம் ... ... *
சீரைப்பயின்றுய்யுஞ்சீலங்கொணாதமுனியைநெஞ்சால் ... *
வாரிப்பருகுமிராமாநுசனென்றன்மாநிதியே ... ... (௨௰)

நிதியைப்பொழியுமுகிலென்னநீசர்தம்வாசல்பற்றித்... ... *
துதிகற்றுலகிற்றுவள்கின்றிலேனினித்தூய்நெறிசேர்... *
யதிகட்கிறைவன்யமுனைத்துறைவனிணையடியாங்... ... ... *
கதிபெற்றுடையவிராமாநுசனென்னைக்காத்தனனே... ... (௨௧)

கார்த்திகையானுங்கரிமுகத்தானுங்கனலுமுக்கண்... ... *
மூர்த்தியுமோடியும்வெப்புமுதுகிட்டுமூவுலகும்... ... ... *
பூத்தவனேயென்றுபோற்றிடவாணன்பிழைபொறுத்த... ... *
தீர்த்தனையேத்துமிராமாநுசனென்றன்சேமவைப்பே... ... (௨௨)

வைப்பாயவான்பொருளென்றுநல்லன்பர்மனத்தகத்தே... *
எப்போதும்வைக்குமிராமாநுசனையிருநிலத்தில்... ... ... *
ஒப்பாரிலாதவுறுவினையேன்வஞ்சநெஞ்சில்வைத்து... ... ...*
முப்போதும்வாழ்த்துவனென்னாமிதுவவன்மொய்புகழ்க்கே... (௨௩)

மொய்த்தவெந்தீவினையாற்பல்லுடறொறுமூழ்த்ததனால்... ... *
எய்த்தொழிந்தேன்முனநாள்களெல்லாமின்றுகண்டுயர்ந்தேன் ... *
பொய்த்தவம்போற்றும்புலைச்சமயங்கணிலத்தவியக்... ... ...*
கற்றமெய்ஞ்ஞானத்திராமாநுசனெனுங்கார்தன்னையே... (௨௪)

காரேய்கருணையிராமாநுஜாவிக்கடலிடத்தில்... ... ... *
யாரேயறிபவர்நின்னருளின்றன்மையல்லலுக்கு... ... ...*
நேரேயுறைவிடநான்வந்துநீயென்னையுற்றபின்னுன்... ... *
சீரேயுயிர்க்குயிராயடியேற்கின்றுதித்திக்குமே... ... ...(௨௫)

திக்குற்றகீர்த்தியிராமாநுசனையென்செய்வினையாம் ... *
மெய்க்குற்றநீக்கிவிளங்கியமேகத்தைமேவுநல்லோர்... ... *
எக்குற்றவாளரெதுபிறப்பேதியல்பாகநின்றோர்... ... ... *
அக்குற்றமப்பிறப்பவ்வியல்பேநம்மையாட்கொள்ளுமே... (௨௬)

கொள்ளக்குறைவற்றிலங்கிக்கொழுந்துவிட்டோங்கியவுன் ... ...*
வள்ளற்றனத்தினால்வல்வினையேன்மனநீபுகுந்தாய்... ... ... *

வெள்ளைச்சுடர்விடுமுன்பெருமேன்மைக்கிழுக்கிதென்று ... ... *
தள்ளுற்றிரங்குமிராமாநுசாவென்றனிநெஞ்சமே .. ... (உஎ)

நெஞ்சிற்கறைகொண்டகஞ்சனைக்காய்ந்தநிமலனங்கள்... ... *
பஞ்சித்திருவடிப்பின்னைதன்காதலன்பாதநண்ணா... ... ...*
வஞ்சகர்க்கரியவிராமாநுசன்புகழன்றியென்வாய்... ... *
கொஞ்சிப்பரவகில்லாதென்னவாழ்வின்றுகூடியதே... ...(உஅ)

கூட்டும்விதியென்றுகூடுங்கொலோதென்குருகைப்பிரான்... ... *
பாட்டென்னவேதப்பசுந்தமிழ்தன்னைத்தன்பத்தியென்னும் ... *
வீட்டின்கண்வைத்தவிராமாநுசன்புகழ்மெய்யுணர்ந்தோர் ... *
ஈட்டங்கடன்னையென்னாட்டங்கள்கண்டின்பமெய்திடவே ...(உகூ)

இன்பந்தருபெருவீடுவந்தெய்திலென்னெண்ணிறந்த... ... ... *
துன்பந்தருநிரயம்பலசூழிலென்றொல்லுலகில்... ... ... *
மன்பல்லுயிர்கட்கிறையவன்மாயனெனமொழிந்த... ... *
அன்பனனகனிராமாநுசனென்னையாண்டனனே... (௩0)

ஆண்டுகணாடிங்களாய்நிகழ்காலமெல்லாமனமே... ... ... *
ஈண்டுபல்யோனிகடோறுழல்வோமின்றோரெண்ணின்றியே... .... *
காண்டகுதோளண்ணறென்னத்தியூரர்கழலிணைக்கீழ்ப்... ... ...*
பூண்டவன்பாளனிராமாநுசனைப்பொருந்தினமே... ... (௩௧)

பொருந்தியதேசும்பொறையுந்திறலும்புகழுநல்ல... ... *
திருந்தியஞானமுஞ்செல்வமுஞ்சேருஞ்செறுகலியால்... ... *
வருந்தியஞாலத்தைவண்மையினால்வந்தெடுத்தளித்த ... ... *
அருந்தவனெங்களிராமாநுசனையடைபவர்க்கே... ... ... (௩௨)

அடையார்கமலத்தலர்மகள்கேள்வன்கையாழியென்னும்... ... *
படையோடுநாந்தகமும்படர்தண்டுமொண்சார்ங்கவில்லும்... ... *
புடையார்புரிசங்கமுமிந்தப்பூதலங்காப்பதற்கென்... ... *
இடையேயிராமாநுசமுனியாயினவிந்நிலத்தே .. .. (௩௩)

நிலத்தைச்செறுத்துண்ணுநீசக்கலியைநினைப்பரிய... ... *
பலத்தைச்செறுத்தும்பிறங்கியதில்லையென்பெய்வினைதென்... ...*
புலத்திற்பொறித்தவப்புத்தகச்சும்மைபொறுக்கியபின்... ... *
நலத்தைப்பொறுத்தவிராமாநுசன்றனயப்புகழே... ... (௩௪)

நயவேனொருதெய்வநானிலத்தேசிலமானிடத்தைப்... ... *
புயலேயெனக்கவிபோற்றிசெய்யேன்பொன்னரங்கமென்னில் ... *

[illegible]பலேபெருகுமிராமாநுசன்மன்னுமாமலர்த்தாள்... ... *
அயரேனருவினையென்னையெவ்வாறின்றடர்ப்பதுவே ... ... (௬௫)

அடல்கொண்டநேமியனாருயிர்நாதனன்றாரணச்சொற்... ... *
கடல்கொண்டவொண்பொருள்கண்டளிப்பப்பின்னுங்காசினியோர் ... *
இடரின்கண்வீழ்ந்திடத்தானுமவ்வொண்பொருள்கொண்டவர்பின் ... *
படருங்குணனெம்மிராமாநுசன்றன்படியிதுவே... ... (௬௬)

படிகொண்டகீர்த்தியிராமாயணமென்னும்பத்திவெள்ளம்... ... *
குடிகொண்டகோயிலிராமாநுசன்குணங்கூறுமன்பர்... ... *
கடிகொண்டமாமலர்த்தாள்கலந்துள்ளங்கனியுநல்லோர் ... ...*
அடிகண்டுகொண்டுகந்தென்னையுமாளவர்க்காக்கினரே... ......(௬௭)

ஆக்கியடிமைநிலைப்பித்தனையென்னையின்றவமே... ... ... *
போக்கிப்புறத்திட்டதென்பொருளாமுன்புபுண்ணியர்தம்... ... *
வாக்கிற்பிரியாவிராமாநுசாநின்னருளின்வண்ணம்... ... ... *
நோக்கிற்றெரிவரிதாலுரையாயிந்தநுண்பொருளே... ... (௬௮)

பொருளும்புதல்வரும்பூமியும்பூங்குழலாருமென்றே... ... *
மருள்கொண்டிளைக்குநமக்குநெஞ்சேமற்றுளார்தரமோ... ...*
இருள்கொண்டவெந்துயர்மாற்றித்தனீறில்பெரும்புகழே... ...*
தெருளுந்தெருடந்திராமாநுசன்செய்யுஞ்சேமங்களே ... (௬௯)

சேமநல்வீடும்பொருளுந்தருமமுஞ்சீரியநற்... ... ... *
காமமுமென்றிவைநான்கென்பர்நான்கினுங்கண்ணனுக்கே... ... *
யாமதுகாமமறம்பொருள்வீடிதற்கென்றுரைத்தான்... ... ...*
வாமனன்சீலனிராமாநுசனிந்தமண்மிசையே... ... ... (௭௰)

மண்மிசையோனிகடோறும்பிறந்தெங்கண்மாயவனே ... ...*
கண்ணுறநிற்கிலுங்காணகில்லாவுலகோர்களெல்லாம்... ... ...*
அண்ணலிராமாநுசன்வந்துதோன்றியவப்பொழுதே ... ... *
நண்ணருஞானந்தலைக்கொண்டுநாரணற்காயினரே... ... (௭௧)

ஆயிழையார்கொங்கைதங்குமக்காதலளற்றழுந்தி... ... ...*
மாயுமென்னாவியைவந்தெடுத்தானின்றுமாமலராள்... ... *
நாயகனெல்லாவுயிர்கட்குநாதனரங்கனென்னும்... ... ... *
தூயவன்றீதிலிராமாநுசன்றொல்லருள்சுரந்தே ... ... (௭௨)

சுரக்குந்திருவுமுணர்வுஞ்சொலப்புகில்வாயமுதம்... ... ... *
பரக்குமிருவினைபற்றறவோடும்படியிலுள்ளீர்... ... ... *

உரைக்கின்றனனுமக்கியானறஞ்சீறுமுறுகலியைத்... ... *
துரக்கும்பெருமையிராமாநுசனென்றுசொல்லுமினே... ...(௯௩)

சொல்லார்தமிழொருமூன்றுஞ்சுருதிகணான்குமெல்லை... ... *
இல்லாவறநெறியாவுந்தெரிந்தவனெண்ணருஞ்சீர்... ... ... *
நல்லார்பரவுமிராமாநுசன்றிருநாமநம்பிக்... ... ...*
கல்லாரகலிடத்தோரேதுபேறென்றுகாமிப்பரே... ... ...(௯௪)

பேறொன்றுமற்றில்லைநின்சரணன்றியப்பேறளித்தற்... ... ௐ
காறொன்றுமில்லைமற்றச்சரணன்றியென்றிப்பொருளைத்... ... *
தேறுமவர்க்குமெனக்குமுனைத்தந்தசெம்மைசொல்லாற் ... *
கூறும்பரமன்றிராமாநுசமெய்ம்மைகூறிடிலே... ... ...(௯௫)

கூறுஞ்சமயங்களாறுங்குலையக்குவலயத்தே... ... ...*
மாறன்பணித்தமறையுணர்ந்தோனைமதியிலியேன் ... ... *
தேறும்படியென்மனம்புகுந்தானைத்திசையனைத்தும் ....*
ஏறுங்குணனையிராமாநுசனையிறைஞ்சினமே... ... ... (௯௬)

இறைஞ்சப்படும்பரனீசனரங்கனென்றிவ்வுலகத்... ... ... *
தறஞ்செப்புமண்ணலிராமாநுசனென்னருவினையின் ... ...*
திறஞ்செற்றிரவும்பகலும்விடாதென்றன்சிந்தையுள்ளே... ... *
நிறைந்தொப்பறவிருந்தானெனக்காருநிகரில்லையே... ... (௯௭)

நிகரின்றிநின்றவென்னீசதைக்குநின்னருளின்கணன்றிப்... ... *
புகலொன்றுமில்லையருட்குமஃதேபுகல்புன்மையிலோர் ... ... ௐ
பகருபெருமையிராமாநுசவினிநாம்பழுதே... ... ௐ
அகலும்பொருளென்பயனிருவோமுக்குமானபின்னே... ...(௯௮)

ஆனதுசெம்மையறநெறிபொய்ம்மையறுசமயம்... ... ... ௐ
போனதுபொன்றியிறந்ததுவெங்கலிபூங்கமலத்... ... ... ௐ
தேனதிபாய்வயற்றென்னரங்கன்கழற்சென்னிவைத்துத் ... ௐ
தானதின்மன்னுமிராமாநுசனித்தலத்துதித்தே.... ... (௯௯)

உதிப்பனவுத்தமர்சிந்தையுளொன்னலர்நெஞ்சமஞ்சிக்... ... ௐ
கொதித்திடமாறிநடப்பனகொள்ளைவன்குற்றமெல்லாம் ... ... ௐ
பதித்தவென்புன்கவிப்பாவினம்பூண்டனபாவுதொல்சீர்... ... ௐ
யதித்தலைநாதனிராமாநுசன்றனிணையடியே... ... ... (௱)

அடியைத்தொடர்ந்தெழுமைவர்கட்காயன்றுபாரதப்போர்... ... ௐ
முடியப்பரிநெடுந்தேர்விடுங்கோனைமுழுதுணர்ந்த... ... ...*

அடியர்க்கமுதமிராமாநுசனென்னையாளவந்திப் ... ... *
படியிற்பிறந்ததுமற்றில்லைகாரணம்பார்த்திடிலே ... ... (ருக)
பார்த்தானறுசமயங்கள்பதைப்பவிப்பார்முழுதும் ... ... *
போர்த்தான்புகழ்கொண்டுபுன்மையினோரிடைத்தான்புகுந்து ... *
தீர்த்தானிருவினைதீர்த்தரங்கன்செய்யதாளிணையோ ... ... *
டார்த்தானிவையெம்மிராமாநுசன்செய்யுமற்புதமே ... ... (ருஉ)
அற்புதன்செம்மையிராமாநுசனென்னையாளவந்த ... ... *
கற்பகங்கற்றவர்காமுறுசீலன்கருதரிய ... ... *
பற்பலுயிர்களும்பல்லுலகியாவும்பரனதென்னு ... ... *
நற்பொருடன்னையிந்நானிலத்தேவந்துநாட்டினனே ... ... (ருங)
நாட்டியநீசச்சமயங்கண்மாண்டனநாரணனைக் ... ... *
காட்டியவேதங்களிப்புற்றதுதென்குருகைவள்ளல் ... ... *
வாட்டமிலாவண்டமிழ்மறைவாழ்ந்ததுமண்ணுலகில் ... ... *
ஈட்டியசீலத்திராமாநுசன்றனியல்புகண்டே ... ... (ருச)
கண்டவர்சிந்தைகவருங்கடிபொழிற்றென்னரங்கன் ... ... *
றொண்டர்குலாவுமிராமாநுசனைத்தொகையிறந்த ... ... *
பண்டருவேதங்கள்பார்மேனிலவிடப்பார்த்தருளுங் ... ... *
கொண்டலைமேவித்தொழுங்குடியாமெங்கள்கோக்குலமே ... ... (ருரு)
கோக்குலமன்னரைமூவெழுகாலொருகூர்மழுவால் ... ... *
போக்கியதேவனைப்போற்றும்புனிதன்புவனமெங்கும் ... ... *
ஆக்கியகீர்த்தியிராமாநுசனையடைந்தபின் ... ... *
வாக்குரையாதென்மனநினையாதினிமற்றொன்றையே ... ... (ருசு)
மற்றொருபேறுமதியாதரங்கன்மலரடிக்காள் ... ... *
உற்றவரேதனக்குற்றவராய்க்கொள்ளுமுத்தமனே ... ... *
நற்றவர்போற்றுமிராமாநுசனையிந்நானிலத்தே ... ... *
பெற்றனன்பெற்றபின்மற்றறியேனொருபேதைமையே ... ... (ருஎ)
பேதையர்வேதப்பொருளிதென்றுன்னிப்பிரமநன்றென் ... *
றோதிமற்றெல்லாவுயிருமஃதென்றுயிர்கண்மெய்விட் ... ... *
டாதிப்பரனொடொன்றாமென்றுசொல்லுமவ்வல்லலெல்லாம் ... *
வாதில்வென்றானெம்மிராமாநுசன்மெய்ம்மதிக்கடலே ... ... (ருஅ)
கடலளவாயதிசையெட்டினுள்ளுங்கலியிருளே ... ... *
மிடைதருகாலத்திராமாநுசன்மிக்கநான்மறையின் ... ... *
சுடரொளியாலவ்விருளைத்துரந்திலனேலுயிரை ... ... *
உடையவனாரணனென்றறிவாரில்லையுற்றுணர்ந்தே ... ... (ருகூ)

உணர்ந்தமெய்ஞ்ஞானியர்யோகந்தொறுந்திருவாய்மொழியின் ... *
மணந்தருமின்னிசைமன்னுமிடந்தொறுமாமலராள் ... ... *
புணர்ந்தபொன்மார்பன்பொருந்தும்பதிதொறும்புக்குநிற்கும் ... *
குணந்திகழ்கொண்டலிராமாநுசனெங்குலக்கொழுந்தே... ...(௬௰)
கொழுந்துவிட்டோடிப்படரும்வெங்கோள்வினையானிரயத்... ...*
தழுந்திவிட்டேனைவந்தாட்கொண்டபின்னுமருமுனிவர்... ... *
தொழுந்தவத்தோனெம்மிராமாநுசன்றன்புகழ்சுடர்மிக் ... ...*
கெழுந்ததத்தாலல்லதிச்சங்கண்டதிருநிலமே... ... ... (௬௧)
இருந்தேனிருவினைப்பாசங்கழற்றியின்றியானிறையும்... ... *
வருந்தேனினியெம்மிராமாநுசன்மன்னுமாமலர்த்தாள் ... ... *
பொருந்தாநிலையுடைப்புன்மையினோர்க்கொன்றுநன்மைசெய்யாப் ...*
பெருந்தேவரைப்பரவும்பெரியோர்தங்கழல்பிடித்தே... ... (௬௨)
பிடியைத்தொடருங்களிறென்னயானுன்பிறங்கியசீர்... ... ...*
அடியைத்தொடரும்படிநல்கவேண்டுமறுசமயச்... ... ... *
செடியைத்தொடருமருள்செறிந்தோர்சிதைத்தோடவந்திப்... ...*
படியைத்தொடருமிராமாநுசன்மிக்கபண்டிதனே... ... (௬௩)
பண்டருமாறன்பசுந்தமிழானந்தம்பாய்மதமா... ... ... *
விண்டிடவெங்களிராமாநுசமுனிவேழமெய்ம்மை... ... ... *
கொண்டநல்வேதக்கொழுந்தண்டமேந்திக்குவலயத்தே... ... *
மண்டிவந்தேன்றதுவாதியர்காளுங்கள்வாழ்வற்றதே... ... (௬௪)
வாழ்வற்றதுதொல்லைவாதியர்க்கென்றும்மறையவர்தந்... ... ...*
தாழ்வற்றதுதவந்தாரணிபெற்றதுதத்துவநூல்... ... ... *
கூழற்றதுகுற்றமெல்லாம்பதித்தகுணத்தினர்க்கு... ... *
நாழற்றதுநம்மிராமாநுசன்றந்தஞானத்திலே... ... ... (௬௫)
ஞானங்கனிந்தநலங்கொண்டுநாடொறுநைபவர்க்கு... ... *
வானங்கொடுப்பதுமாதவன்வல்வினையேன்மனத்தில் ... ... *
ஈனங்கடிந்தவிராமாநுசன்றன்னையெய்தினர்க்கத்... ... ... *
தானங்கொடுப்பதுதன்றகவென்னுஞ்சரண்கொடுத்தே... ... (௬௬)
சரணமடைந்ததருமனுக்காப்பண்டுநூற்றுவரை... ... ...*
மரணமடைவித்தமாயவன்றன்னைவணங்கவைத்த ... ... *
கரணமிவையுமக்கன்றென்றிராமாநுசனுயிர்கட்... ... ...*
கரணங்கமைத்திலனேலரணார்மற்றிவ்வாருயிர்க்கே ... ... (௬௭)
யாரெனக்கின்றுநிகர்சொல்லின்மாயனன்றைவர்தெய்வத்... ... *
தேரினிற்செப்பியகீதையின்செம்மைப்பொருடெரியப்... ... *

பாரினிற்சொன்னவிராமானுசனைப்பணியுநல்லோர் ... ... *
சீரினிற்சென்றுபணிந்ததென்னாவியுஞ்சிந்தையுமே ... (௬௮)

சிந்தையினோடுகரணங்கள்யாவுஞ்சிதைந்துமுன்னாள் ... ... *
அந்தமுற்றாழ்ந்ததுகண்டிவையென்றனக்கன்றருளால் ... ... *
தந்தவரங்கனுந்தன்சரண்டந்திலன்றானதுதந்து ... ... *
எந்தையிராமானுசன்வந்தெடுத்தனனின்றென்னையே ... ... (௬௯)

என்னையும்பார்த்தென்னியல்வையும்பார்த்தெண்ணில்பல்குணத்த ... ... *
உன்னையும்பார்க்கிலருள்செய்வதேநலமன்றியென்பால் ... ... *
பின்னையும்பார்க்கினலமுளதேயுன்பெருங்கருணை ... ... *
தன்னையென்பார்ப்பரிராமானுசவுன்னைச்சார்ந்தவரே ... ... (௭௦)

சார்ந்ததென்சிந்தையுன்றாளிணைக்கீழன்புதான்மிகவுங் ... ... *
கூர்ந்ததத்தாமரைத்தாள்களுக்குன்றன்குணங்களுக்கே ... ... *
தீர்ந்ததென்செய்கைமுன்செய்வினைநீசெய்வினையதனாற் ... ... *
பேர்ந்ததுவண்மையிராமானுசவெம்பெருந்தகையே ... ... (௭௧)

கைத்தனன்றீயசமயக்கலகரைக்காசினிக்கே ... ... *
உய்த்தனன்றூய்மறைநெறிதன்னையென்றுன்னியுள்ளம் ... *
நெய்த்தவன்போடிருந்தேத்துநிறைபுகழோருடனே ... ... *
வைத்தனனென்னையிராமானுசன்மிக்கவண்மைசெய்தே ... ... (௭௨)

வண்மையினாலுந்தன்மாதகவாலுமதிபுரையுந் ... ... *
தண்மையினாலுமித்தாரணியோர்கட்குத்தான்சரணாய் ... ... *
உண்மைநன்ஞானமுரைத்தவிராமானுசனையுன்னும் ... ... *
திண்மையல்லாலெனக்கில்லைமற்றோர்நிலைதேர்ந்திடிலே ... ... (௭௩)

தேரார்மறையின்றிறமென்றுமாயவன்றீயவரைக் ... ... *
கூராழிகொண்டுகுறைப்பதுகொண்டலனையவண்மை ... ... *
ஏரார்குணத்தெம்மிராமானுசனவ்வெழின்மறையிற் ... ... *
சேராதவரைச்சிதைப்பதப்போதொருசிந்தைசெய்தே ... ... (௭௪)

செய்த்தலைச்சங்கஞ்செழுமுத்தமீனுந்திருவரங்கர் ... ... *
கைத்தலத்தாழியுஞ்சங்கமுமேந்திநங்கண்முகப்பே ... ... *
மெய்த்தலத்துன்னைவிடேனென்றிருக்கினுநின்புகழே ... ... *
மொய்த்தலைக்கும்வந்திராமானுசவென்னைமுற்றுநின்றே ... (௭௫)

நின்றவண்கீர்த்தியுநீள்புனலுநிறைவேங்கடப்பொற் ... ... *
குன்றமும்வைகுந்தநாடுங்குலவியபாற்கடலும் ... ... *
உன்றனக்கெத்தனையின்பந்தருமுன்னிணைமலர்த்தாள் ... ... *
என்றனக்குமதிராமானுசவிவையீந்தருளே ... ... (௭௬)

ஈய்ந்தனனீயாதவின்னருளெண்ணின்மறைக்குறும்பைப்... ... *
பாய்ந்தனனம்மறைப்பல்பொருளாலிப்படியனைத்தும்... ... *
ஏய்ந்தனன்கீர்த்தியினாலென்வினைகளைவேர்பறியக்... ... ... *
காய்ந்தனன்வண்மையிராமாநுசற்கென்கருத்தினியே... ... (எஎ)

கருத்திற்புகுந்துள்ளிற்கள்ளங்கழற்றிக்கருதரிய... ... ... *
வருத்தத்தினான்மிகவஞ்சித்துநீயித்தமண்ணகத்தே... ... ... *
திருத்தித்திருமகள்கேள்வனுக்காக்கியபின்னென்னெஞ்சிற் ... *
பொருத்தப்படாதெம்மிராமாநுசமற்றோர்பொய்ப்பொருளே... (எஅ)

பொய்யைச்சுரக்கும்பொருளைத்துறந்திந்தப்பூதலத்தே ... ... *
மெய்யைப்புரக்குமிராமாநுசனிற்கவேறுநம்மை... ... *
உய்யக்கொளவல்லதெய்வமிங்கியாதென்றுணர்ந்தவமே... ... *
ஐயப்படாநிற்பர்வையத்துளோர்நல்லறிவிழந்தே.. ... (எகூ)

நல்லார்பரவுமிராமாநுசன்திருநாமநம்ப... ... ... *
வல்லார்திறத்தைமறவாதவர்களெவரவர்க்கே... ... ... *
எல்லாவிடத்திலுமென்றுமெப்போதிலுமெத்தொழும்புஞ் ... ... *
சொல்லான்மனத்தாற்கருமத்தினாற்செய்வன்சோர்வின்றியே ... அ௰

சோர்வின்றியுன்றன்னிணையடிக்கீழ்த்தொண்டுபட்டவர்பால் ... ... *
சார்வின்றிநின்றவெனக்கரங்கன்செய்யதாளிணைகள் ... ... *
பேர்வின்றியின்றுபெறுத்துமிராமாநுசவினியுன் ... ... *
சீரொன்றியகருணைக்கில்லைமாறுதெரிவுறிலே ... ... (அக)

தெரிவுற்றஞானஞ்செறியப்பெறாதவெந்தீவினையால் ... ... *
உருவற்றஞானத்துழல்கின்றவென்னையொருபொழுதில்... ... ... *
பொருவற்றகேள்வியனாக்கிநின்றானென்னபுண்ணியனோ *
தெரிவுற்றகீர்த்தியிராமாநுசனென்னுஞ்சீர்முகிலே ... ... (அஉ)

சீர்கொண்டுபேரறஞ்செய்துநல்வீடுசெறிதுமென்னும், ... *
பார்கொண்டமேன்மையர்கூட்டனல்லேனுன்பதயுகமாம் ... 3
ஏர்கொண்டவீட்டையெளிதினிலெய்துவனுன்னுடைய ... *
கார்கொண்டவண்மையிராமாநுசவிதுகண்டுகொள்ளே ... ... அங

கண்டுகொண்டேனெம்மிராமாநுசன்றன்னைக்காண்டலுமே ... *
தொண்டுகொண்டேனவன்றொண்டர்பொற்றாளிலென்றொல்லைவெந்நோய்
விண்டுகொண்டேனவன்சீர்வெள்ளவாரியைவாய்மடுத்தின்
றுண்டுகொண்டேனின்னமுற்றனவோதிலுலப்பில்லையே.........(அச)

ஓதியவேதத்தினுட்பொருளாயதனுச்சிமிக்க... ... ... *
சோதியைநாதனெனவறியாதுழல்கின்றதொண்டர் ... ... *

பேதைமைதீர்த்தவிராமாநுசனைத்தொழும்பெரியோர் ... *
பாதமல்லாலென்றனாருயிர்க்கியாதொன்றும்பற்றில்லையே... ... ...(அரு)
பற்றாமனிசரைப்பற்றியப்பற்றுவிடாதவரை... ... ... *
உற்றாரெனவுழன்றோடிநையேனினியொள்ளியநூல் ... ... *
கற்றார்பரவுமிராமாநுசனைக்கருதுமுள்ளம் ... ... *
பெற்றாரெவரவரெம்மைநின்றாளும்பெரியவரே ... ... (அசா)
பெரியவர்பேசிலும்பேதையர்பேசிலுந்தன்குணங்கட் ... *
குரியசொல்லென்றுமுடையவனென்றென்றுணர்வின்மிக்கோர் ... ... *
தெரியும்வண்கீர்த்தியிராமாநுசன்மறைதேர்ந்துலகிற் ... *
புரியுநன்ஞானம்பொருந்தாதவரைப்பொருங்கலியே ... (அஎ)
கலிமிக்கசெந்நெற்கழனிக்குறையற்கலைப்பெருமான் ... ... *
ஒலிமிக்கபாடலையுண்டுதன்னுள்ளந்தடித்ததனால் ... ... *
வலிமிக்கசீயவிராமாநுசன்மறைவாதியராம் ... ... *
புலிமிக்கதென்றிப்புவனத்தில்வந்தமைபோற்றுவனே... ...(அஅ)
போற்றருஞ்சீலத்திராமாநுசநின்புகழ்தெரிந்து ... ...*
சாற்றுவனேலதுதாழ்வதுதீரிலுஞ்சீர்தனக்கோர் ... ...*
ஏற்றமென்றேகொண்டிருக்கிலுமென்மனமேற்றையன்றி ... ...*
ஆற்றகில்லாதிதற்கென்னினைவாயென்றிட்டஞ்சுவனே... ... (அகூ)
நினையார்பிறவியைநீக்கும்பிரானையிந்நீணிலத்தே... ... ... *
எனையாளவந்தவிராமாநுசனையிருங்கவிகள் ... ... *
புனையார்புனையும்பெரியவர்தாள்களிற்பூந்தொடையல்... ... *
வனையார்பிறப்பில்வருந்துவர்மாந்தர்மருள்சுரந்தே ... ... (கூய)
மருள்சுரந்தாகமவாதியர்கூறுமவப்பொருளாம் ... ... *
இருள்சுரந்தெய்த்தவுலகிருணீங்கத்தனீண்டியசீர்... ... ... *
அருள்சுரந்தெல்லாவுயிர்கட்குநாதனரங்கனென்னும் ... ... *
பொருள்சுரந்தானெம்மிராமாநுசன்மிக்கபுண்ணியனே... ...(கூக)
புண்ணியநோன்புபுரிந்துமிலேனடிபோற்றிசெய்யும் ... ...*
நுண்ணருங்கேள்விநுவன்றுமிலேன்செம்மைநூற்புலவர்க் ... ...*
கெண்ணருங்கீர்த்தியிராமாநுசாவின்றுநீபுகுந்தென் ... ... *
கண்ணுள்ளுநெஞ்சுள்ளுநின்றவிக்காரணங்கட்டுரையே ... ... (கூஉ)
கட்டப்பொருளைமறைப்பொருளென்றுகயவர்சொல்லும்.. ......*
பெட்டைக்கெடுக்கும்பிரானல்லனேயென்பெருவினையைக் ... *
கிட்டிக்கிழங்கொடுதன்னருளென்னுமொள்வாளுருவி ... ...*
வெட்டிக்களைந்தவிராமாநுசனென்னுமெய்த்தவனே ... (கூங)

தவந்தருஞ்செல்வந்தகவுந்தருஞ்சலியாப்பிறவிப் ... *
பவந்தருந்தீவினைப்பாற்றித்தரும்பரந்தாமமென்னுந் ... *
திவந்தருதீதிலிராமாநுசன்றன்னைச்சார்ந்தவர்கட் ... *
குவந்தருந்தேனவன்சீரன்றியானொன்றுமுண்மகிழ்ந்தே ... (௯௪)

உண்ணின்றுயிர்களுக்குற்றனவேசெய்தவர்க்குயர்வே ... *
பண்ணும்பரனும்பரிவிலனும்படிபல்லுயிர்க்கும் ... *
விண்ணின்றலைநின்றுவீடளிப்பானெம்மிராமாநுசனிம் ... *
மண்ணின்றலத்துதித்தும்மறைநாலும்வளர்த்தனனே ... (௯௫)

வளரும்பிணிகொண்டவல்வினையான்மிக்கநல்வினையிற் ... *
கிளருந்துணிவுகிடைத்தறியாதுமுடைத்தலையூன் ... *
தளருமளவுந்தரித்தும்விழுந்துந்தனிதிரிவேற் ... *
குளரெம்மிறைவரிராமாநுசன்றன்னையுற்றவரே ... (௯௬)

தன்னையுற்றாட்செய்யுந்தன்மையினோர்மன்னுதாமரைத்தாள் ... *
தன்னையுற்றாட்செய்யவென்னையுற்றானின்றுதன்றகவால் ... *
தன்னையுற்றாரன்றித்தன்மையுற்றாரில்லையென்றறிந்து ... *
தன்னையுற்றாயிராமாநுசன்குணஞ்சாற்றிடுமே ... (௯௭)

இடுமேயினியசுவர்க்கத்திலின்னுநரகிலிட்டுச் ... *
சுடுமேயவற்றைத்தொடர்தருதொல்லைச்சுழல்பிறப்பில் ... *
நடுமேயினிநம்மிராமாநுசனெம்மைநம்வசத்தே ... *
விடுமேசரணமென்றான்மனமேநையன்மேவுதற்கே ... (௯௮)

தற்கச்சமணருஞ்சாக்கியப்பேய்களுந்தாழ்சடையோன் ... *
சொற்கற்றசோம்பருஞ்சூனியவாதருநான்மறையும் ... *
நிற்கக்குறும்புசெய்நீசருமாண்டனர்நீணிலத்தே ... *
பொற்கற்பகமெம்மிராமாநுசமுனிபோந்தபின்னே ... (௯௯)

போந்ததென்னெஞ்சென்னும்பொன்வண்டுனதடிப்போதிலொண்சீர் *
ஆந்தெளிதேனுண்டமர்ந்திடவேண்டிநின்பாலதுவே ... *
ஈந்திடவேண்டுமிராமாநுசாவிதுவன்றியொன்றும் ... *
மாந்தகில்லாதினிமற்றொன்றுகாட்டிமயக்கிடலே ... (௱)

மயக்குமிருவினைவல்லியைப்பூண்டுமதிமயங்கித் ... *
துயக்கும்பிறவியுட்டோன்றியவென்னைத்துயரகற்றி ... *
உயக்கொண்டுநல்குமிராமாநுசவென்றதுன்னையுன்னி ... *
நயக்குமவர்க்கிதிழுக்கென்பர்நல்லவரென்றுநைந்தே ... (௱௧)

நையுமனமுன்குணங்களையுன்னியென்னாவிருந்தெம் ... *
ஐயனிராமாநுசனென்றழைக்குமருவினையேன் ... *

கையுந்தொழுங்கண்கருதிடுங்காணக்கடல்புடைசூழ்........ *
வையமிதனிலுன்வண்மையென்பாலென்வளர்ந்ததுவே........... (௱௨)

வளர்ந்தவெங்கோபமடங்கலொன்றாயன்றுவாளவுணன்... ... ...*
கிளர்ந்தபொன்னாகங்கிழித்தவன்கீர்த்திப்பயிரெழுந்து...... ... .*
விளைந்திடுஞ்சிந்தையிராமாநுசனென்றன்மெய்வினைநோய் ....*
களைந்துநன்ஞானமளித்தனன்கையிற்கனியன்னவே... .... (௱௩)

கையிற்கனியன்னக்கண்ணனைக்காட்டித்தரினுமுன்றன் ... ... *
மெய்யிற்பிறங்கியசீரன்றிவேண்டிலன்யானிரயத் ... ... *
தொய்யிற்கிடக்கிலுஞ்சோதிவிண்சேரிலுமிவ்வருணீ ... ... *
செய்யிற்றரிப்பனிராமாநுசவென்செழுங்கொண்டலே ... ...(௱௪)

செழுந்திரைப்பாற்கடற்கண்டுயில்மாயன்றிருவடிக்கீழ் ... *
விழுந்திருப்பார்நெஞ்சின்மேவுநன்ஞானிநல்வேதியர்கள் ... ... *
தொழுந்திருப்பாதனிராமாநுசனைத்தொழும்பெரியோர்......... ......*
எழுந்திரைத்தாடுமிடமடியேனுக்கிருப்பிடமே...................... (௱௫)

இருப்பிடம்வைகுந்தம்வேங்கடமாலிருஞ்சோலையென்னும்...... ....*
பொருப்பிடம்மாயனுக்கென்பர்நல்லோரவைதன்னொடும்வந்......*
திருப்பிடமாயனிராமாநுசன்மனத்தின்றவன்வந்........................*
திருப்பிடமென்றனிதயத்துள்ளேதனக்கின்புறவே........................(௱௬)

இன்புற்றசீலத்திராமாநுசவென்றுமெவ்விடத்தும்........................*
என்புற்றநோயுடல்தோறும்பிறந்திறந்தெண்ணரிய.......................*
துன்புற்றுவீயினுஞ்சொல்லுவதொன்றுண்டுன்றொண்டர்கட்கே... ...*
அன்புற்றிருக்கும்படியென்னையாக்கியங்காட்படுத்தே................ (௱௭)

அங்கயல்பாய்வயற்றென்னரங்கன்னணியாகமன்னும்.....................*
பங்கயமாமலர்ப்பாவையைப்போற்றுதும்பத்தியெல்லாந்..................*
தங்கியதென்னத்தழைத்துநெஞ்சேநந்தலைமிசையே.......................*
பொங்கியகீர்த்தியிராமாநுசனடிப்பூமன்னவே..............................(௱௮)

திருவரங்கத்தமுதனார்திருவடிகளேசரணம்.

நித்யாநுஸந்தானம்.

முற்றிற்று.

—ஃ*ஃ—

சாத்துமறை,

ஸர்வதேஶதஶாகாலேஷ்வவ்யாஹதபராக்ரம ... *
ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞாவர்த்ததாமபிவர்த்ததாம் ... *
ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞாப்ரதிவாஸரமுஜ்வலாம் ... *
திகந்தவ்யாபிநீபூயாத்ஸாஹிலோகஹிதைஷிணீ ... *

ஸ்ரீமந்ஸ்ரீரங்கஸ்ரியமநுபத்ரவாமநுதிநம்ஸம்வர்த்தய

நம: ஸ்ரீஸைலநாதாயகுந்தீநகரஜந்மநே ... *
ப்ரஸாதலப்தபரமப்ராப்யகைங்கர்யஸாலிநே ... *
ஸ்ரீஸைலேஸதயாபாத்ரம்தீபக்த்யாதிகுணார்ணவம் ... *
யதீந்த்ரப்ரவணம்வந்தேரம்யஜாமாதரம்முநிம் ... *

(நேரிசைவெண்பா)

வாழிதிருவாய்மொழிப்பிள்ளைமாதகவால் ... *
வாழும்மணவாளமாமுனிவன் - வாழியவன் ... *
மாறன்திருவாய்மொழிப்பொருளைமாநிலத்தோர் ... *
தேறும்படியுரைக்குஞ்சீர் ... *

(அறுசீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்)

செய்யதாமரைத்தாளிணைவாழியே ... *
சேலைவாழிதிருநாபிவாழியே ... *
துய்யமார்பும்புரிநூலும்வாழியே ... *
சுந்தரத்திருத்தோளிணைவாழியே ... *
கையுமேந்தியமுக்கோலும்வாழியே ... *
கருணைபொங்கியகண்ணிணைவாழியே ... *
பொய்யிலாதமணவாளமாமுனி ... *
புந்திவாழிபுகழ்வாழிவாழியே ... *

(நேரிசைவெண்பா)

அடியார்கள்வாழவரங்கநகர்வாழ ... *
சடகோபன்றண்டமிழ்நூல்வாழ - கடல்சூழ்ந்த ... *
மண்ணுலகம்வாழமணவாளமாமுனியே ... *
இன்னுமொருநூற்றாண்டிரும் ... *

ஆழ்வார்திருவடிகளேசரணம்